

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## பங்குனி – சித்திரை

மலர் 12 ஏப்ரல் 2023 இதழ் 4

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 11 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 16 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 19 |
| ராஜ தரங்கிணி | 20 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 24 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 27 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 28 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 32 |
| பேயாழ்வார் கண்ட பெருங்காட்சி | 34 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 41 |
| புராணக் கதை | 42 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 44 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| சிவமானஸிக பூஜை | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः॥


Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்








# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

*உங்கள் ரதம் எம் நலத்திற்கு வருக*

*மருத்துக்களே ! மலைகளும், நதிகளும் உங்களைத் தடை செய்யற்க. நீங்கள் விரும்பும் இடத்திற்குச் செல்லுகிறீர்கள். ஒளியையும் புவியையும் சூழ்ந்திருக்கிறீர்கள். துரிதமாய்ச் செல்லும் உங்கள் ரதம் எம் நலத்திற்கு வருக. மருத்துக்களே பூர்வத்திலும், புதிதாய் நடத்தப்பட்ட எந்த வேள்வியையும் கோஷிக்கும் எந்த துதியையும் அறிபவர் நீங்கள். துரிதமாய்ச் செல்லும் மருத்துகளின் தேர்கள் எம் நலத்திற்கு வருக.*

*மருத்துக்களே ! எங்களை சுகப்படுத்துக, துன்புறுத்தாதீர். எங்களை மகிழ்வியுங்கள். உங்கள் நட்பை புலப்படுத்துங்கள். துரிதமாய்ச் செல்லும் மருத்துக்களின் தேர்கள் எம் நலத்திற்கு வருக.*

*மருத்துக்களே! எங்களைச் செல்வத்திற்குச் செலுத்துங்கள். துதிகளால் ஏத்தப்படும் நீங்கள் எம்மை பாவத்திலிருந்து விலக்குங்கள். நாங்கள் அளிக்கும் அவியை விரும்புங்கள். நாங்கள் சௌபாக்கியமாய் இருப்போமாக.*

*[ரிக் வேதம் 5ஆம் மண்டலம்]*

*இந்த 10 ரிக்குகளில் ஒன்பது ரிக்குகளில் 'மருத்துக்களின் தேர்கள் எம் நலத்துக்கு வருக'' என்று மீண்டும் மீண்டும் கோஷிக்கப்படுகிறது. கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ]*

மொக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பச்சிலை மரத்தை பெண் வண்டு அண்டியிருப்பது போல் மயிர்கூச்சால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீமன் நாராயணனின் உடம்பை தழுவி நிற்பதும் விபூதிகள் அனைத்தையும் ஏற்றதுமான மங்களங்களுக்கு அதிஷ்டான தேவதையான ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் கடைக்கண் விலாஸம் எனக்கு மங்களங்களை அளிப்பதாக இருக்கட்டும்.

ப்ரேமத்தாலும் வெட்கத்தாலும் ஏற்பட்ட செல்லுதல் திரும்புதல்களை முரனை அழித்த கடவுளின் முகத்தில் அடிக்கடி செய்கின்றதோ அழகு வாய்ந்து கரு நீலத்தாமரையில் இருக்கின்ற பெண் வண்டு போன்றதோ அவ்விதமான பாற்கடலில் உதித்த மஹாலக்ஷ்மியின் கண் நோக்கின் வரிசை எனக்கு ஸம்பத்தைத் தருவதாக.

ஸந்தோஷத்தினால் கொஞ்சம் ஒரு பாகத்தில் மூடிகொள்ளப்பட்ட கண்ணை உடைய பெருமாளை அடைந்து ஆனந்ததுக்கு மூலமாயும் இமைகொட்டு நீங்கப்பெற்றதும், அனுராகத்தை வளர்ப்பதும் கொஞ்சம் கோணலாக்கப்பட்ட கருவிழி இமைகளை உடையதுமான சேஷ தல்பத்தில் சயனித்திருக்கும் பெருமானின் பிராட்டியினுடைய த்ருஷ்டி விலாஸம் எனக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும்.

ஸ்ரீ சங்கரர் கனகதாரா ஸ்தவம்



# ஆசிரியர் பக்கம்

அண்மையில் ஒரு நீதிபதி பேராசையாலேயே இவ்வளவு அனர்தங்கள் வருகின்றன என்று தன் கருத்தைத் தெரிவித்தார். உண்மை உலகில் பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் அவருடைய கருத்து சரியானது என்று கட்டியம் கூறுகின்றன. **அர்தமனர்தம் பாவய நித்யம்**' என்று ஸ்ரீ சங்கரர் கூறினார். '**ஆசை அறுமின் ஆசை அறுமின்**' என்று திரு மூலர் கூறினார். **அவா அறுத்தல்** என்று வள்ளுவரும் கூறினார். அப்படியென்றால் நல்ல ஆசையே கூடாதா! பொருளை அனர்த்தம் என்று ஸ்ரீ சங்கரர் கூறினாலும் '**யல்லபஸே நிஜ கர்மோபாத்தம் வித்தம் தேன வினோதய சித்தம்**' (எந்த வேலையால் பணம் கிடைக்கிறதோ அதனாலேயே அனுபவி) என்றும் கூறுவார். ஆசையை அறுக்கச் சொன்னாலும் '**செய்க பொருளை**' என்று வள்ளுவரும் கூறுவார். பொருளிருந்தால் தான் மதிக்கப்படிவர் என்றும் கூறுவார் வள்ளுவர். ஒரே முரண்பாடாக உள்ளதே. இங்கு கீதை வழிகாட்டுகிறது. **''தர்மாவிருத்த பூதேஷு காமோஸ்மி''** (தர்மத்திற்கு முரணில்லாத ஆசையாக நானிருக்கிறேன்) என்று ந்யாயமான ஆசையை அங்கீகரிக்கிறார் கீதசார்யன். அடிப்படையான இருக்க வீடு உடுக்க துணி, உண்ண சாப்பாடு என்னும் விஷயங்கள் ஒரு மனிதனுக்கு அவஸ்யம். இவைகளைக் கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமை. இதற்கு புறம்பாகப் போகும் போது தான் தர்மத்திற்கு விரோதமான செயல்கள் ஏற்படுகின்றன. பண்டட மாற்று முறை இருந்த வரையில் முரண் எதுவும் இல்லை. புரட்சிகள் ஏற்பட்ட பின் பணம் ஒரு லக்ஷ்யமாக ஆனபின் அனர்தம் தோன்றியது. Global economy என்று வந்தது.

எந்த ஒரு நாடும் தன் இச்சையாக இப்போதைய காலத்தில் இயங்குவது கடினம். ஏற்றுமதி இறக்குமதி வாயிலாக பண பரிமாற்றம் நடைபெறுகிறது. தவிர்க்க முடியாது. எதுவும் அற வழியில் நடைபெறுகிறதா என்னும் கேள்வி தவிர்க்க முடியாதது. அனைவரும் தர்மவான்களாக இருக்க முடியாது. பணம் ஒன்றுதான் லக்ஷ்யம் என்னும்போது பேராசையும் கூடவே வரும். மேற்கத்திய சிந்தனைக்கும் நம் நாட்டு சிந்தனைக்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. அது புரியாததால் மக்கள் பேராசையில் உழல்கின்றனர்.

கடவுள் படைப்பில் அனைத்தும் மனிதனின் போகத்திற்கே, அதை எந்த வழியிலும் அடையலாம், அனுபவிக்கலாம் என்பது மேல் நாட்டார் சிந்தனை. இதற்கு மாறாக

படைப்பு அனைத்தும் ஈஸ்வரனே. பற்று இல்லாமல் மனிதன் அனுபவிக்க வேண்டும். யாருடைய தனமும் உனதல்ல. ஈஸ்வரார்ப்பணம் செய்து அனுபவித்தல்தான் சரியான முறை. இது நம் நாட்டு சிந்தனை. இந்த சிந்தனை நூல்களில் உள்ளது. நடைமுறையில் இல்லை. இல்லாதவன் இருப்பவனைப் பார்த்து பொறாமைப்படுவது இயற்கை. ஆனால் இருப்பவனும் அதிகமாக ஆசைப்படுவது செயற்கை. காரணம் திருப்தியின்மை. நம் நாட்டு சிந்தனை சரியான முறையில் மக்களைப் போய் அடையவில்லை.

முக்கியமாக இளம் தலைமுறை அடக்கமில்லாமல் உள்ளது. தேவைக்கு அதிகமாக பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் மாய வலையில் வீழ்கிறது. அவர்களை ஏமாற்றுவதற்கென்றே சில கும்பல்கள் அவர்களைச் சீரழிக்கின்றன. சட்டத்தின் ஓட்டைகளை அறிந்தவர்கள் அவர்கள். எளிதில் தப்பிவிடுவர். இந்த வலையில் பாமர மக்களும் ஆசையினால் உந்தப்பட்டு வீழ்கின்றனர். பேராசை பெரும் நஷ்டம் இது சொல்லளவில்தான் உள்ளது பணத்தை லக்ஷியமாகக் கொள்ளாமல் ஸேவையை லக்ஷியமாகக் கொண்டால் விமோசனம் வரும் என்று நம்புகிறோம். அதுவும் சாத்யமில்லை. வ்யாஸ பகவான் காலத்திலேயே தர்ம வழியை விட்டு மக்கள் விலகியிருந்தார்கள் போலும்.

தனது 'பாரத ஸாவித்ரியில்' ஓலமிடுகிறார். **'ஊர்த்வபாஹுுூ விரம்யேஷ ந ச கச்சித் ஸ்ருணோதி மே தர்மாதர்த்தச்ச காம்மச்ச ஸ கிமர்த்தம் ந ஸேவ்யதே'** அந்தோ ! கைகளைத் தூக்கியவனாய் அரற்றுகிறேன். கேட்பாரில்லை. தர்மத்திலிருந்துதான் அர்த்தமும், காமமும் அதையேன் ஸேவிப்பதில்லை'' அவர் சொல் இப்போதும் பொருந்தும். எப்போதும் பொருந்தும். ஆசார்ய ஸ்தானத்தில் இருப்பவர்களும் உபன்யாசகர்களும் திரும்ப திரும்பச் சொல்கிறார்கள். கேட்பதற்குத்தான் யாருமில்லை. மீள்வதற்கு வழி?


மாயா ரூபிணியான அன்னையைச் சரண் புகுவோம், விடுதலைக்கு வழி கேட்போம். **'அக்னே நய ஸுுபதா'** (அக்னி பகவானே நல் வழி காட்டு) என்று கேட்போம். படைத்தவள் அவள் . நம் கூக்குரலுக்கு நிச்சயம் செவி சாய்ப்பாள் என்று கூறி எளிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டி உரத்த சிந்தனையை வெளிபடுத்திய ஸ்ரீ சரணர்களின் பொற் பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

**ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !**

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## பவக்கடல் கடையும் பகவத் மத்து !



இப்படி அநேக சிறப்புக்கள் பொருந்திய கோவிந்த நாமாவைச் சொல்லி பகவானை அழைத்து **'பவ ஜலதி மதன மந்த்ர'** என்கிறார் ஆசார்யாள்.

'பவம்' என்றால் ஸம்ஸாரம்; 'ஜலதி', என்றால் ஸமுத்ரம். 'பவ ஜலதி' என்றால் ஸம்ஸார ஸாகரம். 'மதன' என்றால் கடைவது Mathana என்று சொல்ல வேண்டும். Madana என்றால் மன்மதனுக்கு பேராகி விடும். Madana என்றால் போதை உண்டாக்குவது என்று அர்த்தம். அப்படி பண்ணும் மதனவேள் ஜனங்களின் மனஸை மதனம் (Mathanam) பண்ணுகிறார் போல் காமத்தினால் கடைந்து கொந்தளிக்கச் செய்வதால்தான் மன்மதன் (Manmathan) என்றும் பெயர் பெற்றிருக்கிறான். தயிரை மத (tha)னம் பண்ணுகிறபடியால் தான், தயிர் சிலுப்பும் குச்சியை 'மத்து' என்கிறோம். 'மந்த்ர' என்பது மந்தர மலை என்று பொருள்படும். **'பவ ஜலதி மதன மந்த்ர'** என்றால் 'ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிற மந்த்ர மலையாக இருக்கிறவனே!' என்று அர்த்தம்.

அம்ருத மதனத்துக்காகப் பாற்கடலை தேவாஸுரர்கள் கடைந்த போது மந்த்ர மலையைத் தானே மத்தாகப் போட்டு, அதிலே வாஸகிப் பாம்பைக் கயிறாகச் சுற்றிக் கடைந்தார்கள்? அந்த மாதிரி இப்போது நாம் மாட்டிக் கொண்டிருக்கிற இந்த சாவுக்களமான ஸம்ஸார ஸாகரத்திலிருந்தும் நித்யத்வமுள்ள மோக்ஷமான அம்ருதத்தைப் பெறுவதற்காக பகவானே மந்த்ர மலையாக வர வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார். பாற்கடலக் கடைந்த போது மந்த்ர மலை அலைகளில் நிலை தடுமாறாதபடி மஹாவிஷ்ணு தான் ஆமை ரூபத்தை எடுத்துக் கொண்டு அதைத் தூக்கித் தாங்கிக் கொண்டார். அதுதான்

கூர்மாவதாரம். இந்த ஷட்பதீ ஸ்தோத்திரத்திலேயே நாலாம் ச்லோகத்தில் 'உத்த்ருத நக' என்ற போது இப்படி பகவான் மலையைத் தாங்கியதைச் சொல்லியிருக்கிறது. (கூர்மவதாரத்தில் மந்த்ர மலையைத் தாங்கினது, க்ருஷாணவதாரத்தில் கோவர்த்தன கிரியைத் தூக்கினது என்ற இரண்டு ஸந்தர்ப்பங்களில் பகவான் **'உத்த்ருத நக'** னாக இருந்திருக்கிறான்.)

பாற்கடலில் மந்த்ர மலையைத் தாங்கினவனையே இங்கே, **'பவஜலதி'** மதன மந்த்ர, என்னும் போது ஸம்ஸார ஸாகரத்தைக் கடைய உதவுகிற ஒரு மந்த்ர மலையாக உருவகப்படுத்துகிறார். இங்கே மலையைத் தாங்குகிறவனாக அன்றி மலையாகவே வர்ணிக்கிறார். இதற்கு அர்த்தம் என்ன? ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடத்துவிக்கிறான் என்று வழக்கமாய்ச் சொல்வது போல் சொல்லாமல், ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிற மத்தாக இருக்கிறான் என்று ஏன் சொல்ல வேண்டும்.

பாற்கடலைக் கடைந்த போது முதலில் விஷம் வந்தது; அப்புறம்தான் அம்ருதம் வந்தது. கடைந்து கடைந்து முதலில் அதிலிருக்கிற கெட்டதை எல்லாம் விஷ ரூபத்தில் திரட்டி வெளிப்படுத்திய அப்புறந்தான், நல்லதான அம்ருதம் வந்தது. நம்முடைய வாழ்க்கையையும், ஸம்ஸாரத்தையும் இப்படிக் கடைய வேண்டும். தன்னாலே அது அலை அடித்துக் கொண்டிருப்பதுதான். காம, க்ரோதாதிகளான பல சலனங்களால் அது அலைவீசிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்குள்ளேயே ஈச்வர தத்வமும் அம்ருதம் போல் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஸம்ஸாரக் கடலை நன்றாகக் கடைந்து காம, க்ரோதாதிகள் விஷயமாகத் திரண்டு வெளியே போகும்படி செய்து விட்டால் அப்புறம் திவ்ய அநுபவம், ஈச்வர ஸாக்ஷாத்காரம் என்கிற அம்ருதம் வந்து விடும். முதலில் கெட்டதை எல்லாம் திரட்ட வேண்டும். எதற்காக என்றால் வைத்துக் கொண்டு அனுபவிப்பதற்காக அல்ல. வெளியிலே துரத்துவதற்காகத்தான்! குப்பையை எல்லாம் ஒரு இடமாக பெருக்கித் திரட்டி வெளியிலே கொட்டுவது போல ! அப்படி வெளியிலே துரத்துகிற வரை கெட்டதுகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை பகவானே மத்தாக வந்து ஒன்றாகச் சேர்த்து ஒரு இடத்தில் Concentrate செய்து (திரட்டிக்) கொடுக்கிறான். பூஜை, க்ஷேத்ராடனம், ஸ்தோத்ரம் படிப்பது, ஜபம், த்யானம் என்கிற ஸாதனையெல்லாம் பகவானின் அனுக்ரஹ ஸ்வரூபம் தான். இப்படிப்பட்ட ஸாதனைகளால் வாழ்க்கைக் கடலை கடைந்து முதலில் விஷத்தைத் திரட்ட வேண்டும். பிறகு, அதை வெளியே அனுப்பிவிட வேண்டும். அப்புறம் அம்ருதத்தை அடைய வேண்டும்.

ஆகக் கூடி, எடுத்தவுடன் அம்ருதம் வேண்டும் என்றால் முடியாது. விஷத்தை அநுபவித்து தீர்த்தபின் தான் அம்ருதம் வரும். வாழ்க்கையில் கெட்டது, கஷ்டம், காம

க்ரோதம் எல்லாம் இருந்துதான் ஆக வேண்டும். போக போக இதையெல்லாம் விலக்கிவிட்டு ஒரே நல்லதாக, பேரின்பமாக ஆக வேண்டும்.

கெட்டதுகள் இருக்கின்றனவே என்று நாம் ஓயாமல் அழுது கொண்டும், பயந்து கொண்டும், நம்பிக்கை இழந்து கொண்டும் இருக்க வேண்டாம் என்று ஆறுதலாகத் தெம்பு ஊட்டுகிற விதத்தில் **'பவ ஜலதி மதன மந்த்ர'** என்று ஆசார்யாள் சொல்கிறார். மத்து போட்டுக் கடைகிற போது எத்தனை கொந்தளிப்பு. எத்தனை பாடுபட வேண்டியிருக்கிறது? அம்மாதிரி நம் பூர்வ கர்மா, பழைய வாஸனைகள் தீருவதற்கும் வாழ்க்கையைக் கடைகிற கடையலில் மொத்துப்பட வேண்டும். இப்படிப் பல சோதனைகளில் பரீக்ஷகளில் தேறின பிறகுதான் விமோசனம் கிடைக்கும். அப்புறம் விமோசனம் கிடைப்பதற்காகவே, இப்போது ஸாக்ஷாத் பகவான்தான் இத்தனை கொந்தளிப்பை உண்டாக்குகிறான் என்று தெரிந்துவிட்டதானால் நம்முடைய பயம், அழுகை, நம்பிக்கைத் தளர்ச்சியெல்லாம் போய் விடும்.

மத்வாசார்யார் உடுப்பியிலே ப்ரதிஷ்டை பண்ணிய க்ருஷ்ணன் கையில் மத்து இருக்கிறது. பகவானே மந்த்ர மலை என்ற மத்தாக வந்து ஸம்ஸார ஸாகரத்தைக் கடைகிறான் என்று சங்கராச்சார்யார் சொல்கிறார் !

மத்தைக் கயிற்றால் சுற்றுகிற மாதிரி பகவானையே சுற்றிக் கட்டிப் போட்டிருந்த போதுதான் அவன் தாமோதரனானது. மத்தைப் போட்டு யசோதை தயிர் கடைந்து கொண்டிருந்த போது அவளிடம் பாலக்ருஷ்ணன் பால் குடித்துக் கொண்டிந்தான். அடுப்பிலே பால் பொங்கி வந்தது. அதனால் குழந்தைக்குப் பால் கொடுப்பதை விட்டு விட்டு அவள் எழுந்திருந்தாள். அதிலே ஏற்பட்ட ஆத்திரத்தில் தான் ஸ்வாமி தயிர்ச் சட்டியை உடைத்து, உறி வெண்ணையை எடுத்துக் குரங்குகளுக்கு உபசாரம் பண்ணி, முடிவிலே யசோதை கட்டிப் போட, தாமோதரனாக ஆனது. **'தாமோதர'** என்று ச்லோகத்தை ஆரம்பித்து, அப்புறம் அவனையே மத்தாக சொல்வதில், இந்த ஸ்தோத்ரம் பூராவும் ஒன்றிலிருந்து ஒன்றாக அபிப்ராயங்கள் கிளைவிட்டுக் கொண்டு போகிற அழகில் இன்னொன்றைப் பார்க்கிறோம் !

ஸம்ஸார ஸாகரத்தைக் கடையும் போது முதலில் ஏன் விஷம் வர வேண்டும். லோக வாழ்க்கையில் ஏன் கஷ்டம் இருக்க வேண்டும். கெட்டது இருக்க வேண்டும் என்றால் அது தான் பகவானுடைய விளையாட்டு இயற்கை நியதிலேயே இப்படித்தான் வைத்திருக்கிறார். காய் கசக்கத்தான் வேண்டும். அப்புறம் கசப்பு காயே துவர்ப்பாக வேண்டும். அதற்கப்புறம் துவர்ப்பு புளிப்பாக வேண்டும். கடைசியில் தான் புளிப்பு

தித்திப்பாக வேண்டும் என்று வைத்திருக்கிறார். அப்படியே நம்முடைய காமம், க்ரோதம் முதலிய கசப்பு எல்லாம் படிப்படியாகத் தான் துவர்த்து, புளித்து அப்புறம் ப்ரசாந்த மதுரமாக வேண்டும். அதனால் நமக்கு இந்த தோஷங்கள் இருக்கிறதே என்று அழ வேண்டாம். பகவானை நினைத்துக் கொண்டு பக்தியோடு இருந்து கொண்டு, கர்மாநுஷ்டானங்களைப் பண்ணிக் கொண்டு ஜனங்களுக்கு நம்மாலான தொண்டைச் செய்து கொண்டு இருந்தால் தன்னால் காலக்ரமத்தில் இந்த தோஷம் எல்லாம் போய்ப் பழுத்த பழமாக, அன்பு இருக்கிற ஒரே மதுரமயமாக ஆகிவிடுவோம். இம்மாதிரி பக்தி, கர்மாநுஷ்டானம், ஸேவை, த்யானம் முதலியவை இல்லாவிட்டால் கசப்பு மாறவே மாறாது.

இப்போது இத்தனை தோஷங்களோடு இருக்கிற மாதிரியே மனம் போனபடி இருந்து கொண்டு எப்போதும் கசப்பாக இருப்பதும் ஸரியில்லை. தோஷம் இருக்கிறதே என்று ஓயாமல் அழுது கொண்டிருப்பதும் ஸரியில்லை. செய்ய வேண்டிய கர்மாக்களைப் பண்ணிக் கொண்டே போனோமானால் கசப்பு எல்லாம் மாற வேண்டிய போது மாறும்; மதுர மயமாய் விடும்.


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்


## சிறப்பு அருளுரைகள்

25 ஆண்டுகளுக்கு முன்னாடி ய 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' , 'வாய்ஸ் ஆஃப் ரஷ்யா' என்ற பேப்பர்கள் வந்து கொண்டே இருந்தது. அதைப் பார்த்து விட்டு 'வாய்ஸ் ஆஃப் சங்கரா' என்று வையுங்கள் என்று சொன்னேன்.

சரியென்று ஒத்துக் கொண்டு 'ஆதிசங்கரா' அதீதா என்ற பெயரில் ஒரு ரிசர்ச் சென்டர் ஆரம்பித்து பத்திரிகை நடத்தினார்கள். அதற்கென்று ரிசர்ச் பண்ணி ஆராய்ச்சி முடிவுகளை மத்திய அரசுக்கு அனுப்பித்து அவர்களிடமிருந்து 100 சதவிகிதம் 'எக்ஸம்ஷன்' வாங்கினார்கள்.

ஆனால் தொடர்ந்து அந்த ஆராய்ச்சிகளைப் பண்ண முடியவில்லை. வாய்ப்புக் குறைந்து விட்டது. ஆனால் தொடர்ந்து அந்தப் பெயரிலேயே வேதபாட சாலைகள், சாஸ்திரப் பாடசாலைகளை நடத்தினார்கள். ராம சுபாஷ் என்ற பெரிய பண்டிதரை வைத்து வேதங்களை ஆராய்ச்சி பண்ணி நூல்களாக வெளியிட்டார்கள்.

முக்கியமாக 'ஆதி சங்கரா அதீதா' என்ற பெயரை வைத்ததற்கு காரணம்,



நமக்கெல்லாம் குருவின் ஞாபகம் வரவேண்டும் என்பதற்காகத் தான். குருதான் நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற பரம்பரையான கொள்கையை முன்னிட்டுத்தான் அந்தப் பெயரை வைத்தார்கள்.

நமக்கு முதன் முதலான குரு தட்சிணா மூர்த்தி.

**'குருவே சர்வயோகானாம்....**

**.... ஸ்ரீ தட்சிணா மூர்த்தியே நமஹ '**

தட்சிணாமூர்த்தி ஒவ்வொரு கோயிலிலும் உட்கார்ந்து கொண்டு, காலனைக் காலால்

வதைத்து நம்மை எல்லாம் காத்து சின்முத்திரை காட்டி அருள்பாலிக்கிறார்.

தட்சிணாமூர்த்தி என்பவர் அனாதிகாலம் தொட்டு, சிவனுடைய வடிவமாக நம்மிடையே அனுக்கிரஹம் பண்ணி வருகிறார்.

அவர்தான் நமக்கு மூல குரு. அவர்தான் நமக்குச் சின்முத்திரை காட்டி அமர்ந்திருக்கிறார். அவருடைய இரண்டு விரல்களையும் கூர்ந்து கவனித்தால் ஒட்டாமல் ஒட்டி இருக்கும். அப்படி தொட்டும், தொடாமலும் இருக்கும் பந்தத்தை நமக்கு அவர் நினைவுபடுத்துகிறார்.

தொட்டால் தான் பந்தம். தொடாவிட்டால் அது பந்தம் இல்லை.

நினைத்தால் ஆத்மா வேறு, சிவன் வேறு, உலகம் வேறு, பிரபஞ்சம் வேறு.

நினைக்காவிட்டால் வேறுபாடே இல்லை எல்லாம்... எல்லாமே ஒன்றாக நிற்கும் நிலை அது. அதை நினைவுபடுத்துவதற்காகவே சின்முத்திரை காட்டி அமர்ந்திருக்கிறார் தட்சிணாமூர்த்தி.

சின்னக் குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை எல்லோரும ஆனந்தம் அடையும் பொருட்டு, ஆலமரத்தடியில் அமர்ந்து கொண்டு பேசாமலேயே சின்முத்திரை காட்டிக் கொண்டு இருக்கிறார் அவர்.

அவரது சின்முத்திரையைச் சிறிது நேரம் கூர்ந்து பார்த்தாலே போதும் மனம் மகிழ்ச்சி அடையும். மனத்திலே எத்தனை சந்தேகங்கள் வந்தாலும் சரி, அந்தச் சின்முத்திரையைப் பார்த்தவுடனேயே எல்லாச் சந்தேகங்களும் அப்படியே நீங்கி மனச்சாந்தி அடையலாம்.

ஜீவனும் ஆத்மாவும் வேறு வேறு என்று தோன்றுகிறது. அதனால்தான் விவகாரமான காரியங்கள் எல்லாம் நடைபெற்று வருகிறது.

ஜீவனும் ஆத்மாவும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றுதான் என்பதை நமக்கு உபதேசித்த குரு, முதல் குரு, அனாதி குரு, ஸ்ரீ தட்சிணாமூர்த்தியே ஆவார்.

அந்த அனாதி குருவிலிருந்துதான் பரமேஸ்வரன் வந்து சங்கராச்சாரியாராகவும் பேசுகிறார்.

தட்சிணாமூர்த்தி என்ன உபதேசம் சொன்னாரோ அதே அத்வைதத்தை சங்கராச்சாரியார் சொன்னார். கொஞ்சம் கூட முன்னேயோ, பின்னயோ மாறிப் போய்ச் சொல்லவே இல்லை.

வேதத்துக்கு என்ன தாத்பரியமோ அந்தத் தாத்பரியத்தைத்தான் சொன்னாரேயொழிய தனக்கு என்று ஒரு சொந்த அர்த்தம் என்று எந்த இடத்திலேயும் சொல்லாத மகான் அவர்.

வேத மந்திரத்துக்கு உரியது என்னவோ, அதைத் தான் சொல்லுகிறேன் என்று சொன்னார். வேதத்திற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்தவர் பரமாத்மாவிற்கு சமமாக வேதத்தைப் பார்த்து, பரமாத்மாவுக்கும் வேதத்துக்கும் குறை வராமல் அகண்டமாக, நிலைத்து இருக்க வேண்டும் என்று நினைத்த ஒரே மகான் அவர். நமக்கு எல்லாம் அப்படிக் குருவாக இருக்கிற ஒரே மகான் ஆதிசங்கரர்.

ஆதிசங்கரர் சுயசித்தாந்தம், அதாவது, தன்னுடைய சித்தாந்தம் என்று எதுவுமே பண்ணவில்லை வேதத்துக்கு என்ன லட்சியமோ, அந்தத் தாத்பரியத்தைத்தான் நான் எடுத்துச் சொல்கிறேன். இதுதான் தாத்பரியம் என்று ஒரே நோக்கத்துடன் எடுத்துச் சொன்னவர் ஆதிசங்கரர்.

வேதவியாசர் என்ற ஒரு மகரிஷி இருந்தார். அவர் வேதங்களை எல்லாம் வகுத்துப் பல பிரிவுகளாக எடுத்துக் கொடுத்தார். அதனால்தான் அவருக்கு வேத மகரிஷி என்று பெயர் வந்தது. ரிக் வேதம், சாம வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம் என்று நான்கு வேதங்களையும் பலப்பலக் கிளைகளாகப் பிரித்துக் கொடுத்தார். அதனுடைய சாரம்சங்களை எல்லாம் விளக்குவதற்காக 18 புராணங்களையும் எழுதி வைத்தார். அந்த வேதங்களிலுள்ள உபநிஷத்துக்களை எடுத்துக் கொண்டு அவற்றிற்கு என்னென்ன அர்த்தங்கள் உள்ளது; தாத்பரியம் உள்ளது என்பதை ஆராய்ந்து, எதற்காக உபநிஷத் வாக்கியங்கள் வந்துள்ளன என்பதைக் கண்டுபிடித்தார்.

சின்னச் சின்ன வரிகளிலே 'சூத்திரங்கள் என்பார்களே' சூத்திரம் என்றால் சூட்சணா சூத்திரம் அதாவது நுணுக்கமாகத் தெரிவிக்கிறது என்பார்கள்.

சின்னதாகச் சொல்வதற்கு ஒரு பெரிய விளக்கம் அளிப்பதாகும். அப்படி நமக்குச் சின்னதாகக் குறிப்பு குறிப்புகளுக்குத் தகுந்த வாக்கியங்களை உபநிஷதத்திலிருந்து எடுத்துக் கொடுத்தவர்.

வேத வியாசர் ஒரு வரி எடுத்துக் கொடுத்தார். வேதங்களின் உபநிஷதத்திலிருந்து அவர் எடுத்துக் கொடுத்த சிறிய வரிகளுக்கு இதுதான் அர்த்தம் என்று கண்டுபிடித்துக் கொடுத்தவர் ஆதிசங்கரர்.

உபநிஷத்துக்கள் பெரிய சமுத்திரம். அந்த சமுத்திரத்துக்குள்ளே சென்று வேதவியாசர் சொன்ன வரிகளுக்கு உண்டான அர்த்தங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தவர் ஆதிசங்கரர். அப்படிக் கண்டுபிடிப்பது ரொம்ப ரொம்பக் கஷ்டமான காரியம் !

அன்றைக்கு ஆதிசங்கரர் அந்த விளக்கமும் முடிவும் சொல்லவில்லையானால், இன்றைக்கு பின்னால் வந்த விசிஷ்டாத்வைதமோ, துவைதமோ, நின்மார்க்கத்வைதமோ, சேவாத்வைதமோ, எந்த ஒரு அத்வைதமும் வந்திருக்காது.

ஆதிசங்கரர் போட்ட வழியிலே, இவர்கள் என்னென்ன அர்த்தங்களைச் சொல்லலாம் என்று பார்த்தார்களே தவிர, முதல் முதலாக வழி சொல்லிக் கொடுத்தவர் ஆதிசங்கரர்தான்.

இந்த வரிக்கு இதுதான் அர்த்தம். இந்த வரிக்கு இதுதான் தாத்பரியம். இந்த வரிக்கு இதுதான் விசேஷம் என்று தீர்மானம் பண்ணிக் கொடுத்தவர் ஆதிசங்கரர்.

அதன் பிறகு அவர் அவர்களுடைய வழிகளைப் பிரித்துக் கொண்டார்கள். இப்படிப் போகலாமா, அப்படிப் போகலாமா என்று பலப்பல வழிகள் எல்லாம் அதற்குப் பின்னாலே தான் வந்தது.

ஆதிசங்கரர் தான் இன்னென்ன வேதங்கள், இது இதற்காக வந்தது, இது இதிலே உள்ளது, இந்த இந்த லட்சியத்திற்காகத்தான் வேதங்களும், உபநிஷதங்களும் வந்தது என்று நிர்ணயம் பண்ணியவர்.

அப்படி அவர் எழுதிய நூலூக்கு - சூத்திரங்களை ஒவ்வொன்றாக எடுத்து தனித்தனியாக விளக்கம் எழுதிய நூலூக்குப் பெயர்தான் ‘பிரம்ம சூத்திர பாஷ்யம்.’

பிரம்மம் என்றாலே பரமாத்மா.

ஆகவே பிரம்ம சூத்திரத்துக்கு பாஷ்யம் எழுதினார் ஆதிசங்கரர். பிரம்மத்தைப் பற்றி தெரிவிக்கக் கூடிய வரிகள் உபநிஷதத்திலே எங்கெங்கு உள்ளதோ அவற்றை எல்லாம் எடுத்துத் தொகுத்து விளக்கம் கொடுத்தார்.

பெயரிலேயே அர்த்தம் விளக்குகிறது. பிரம்ம சூத்திர பாஷ்யம்.

‘அதற்கு அடுத்தபடியாக கீதைக்குப் பாஷ்யம் எழுதினார்?’

கீதைதான் நமக்கெல்லாம் நன்கு புரியுமே, அதற்கு எதற்கு பாஷ்யம்? என்று கேட்கலாம்.

கிருஷ்ண பகவான் நீதியைச் சொல்லி அது நமக்கு எளிதாகப் புரிந்தாலும் அதில் பல தினுசான அம்சங்களும், அர்த்தங்களும் வந்து அத்வைதத்துக்கு விரோதமாகப் போய்விடுமோ என்று கருதி அந்தச் சித்தாந்தங்களிலிருந்து மாறுபட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காக, தானே ஒரு பாஷ்யம் எழுதினார். அதற்குக் ‘கீதா பாஷ்யம்’ என்று பெயர் வைத்தார்.

மூன்றாவதாக - அதை எடுத்து பத்து உபநிஷத்துக்கள் எழுதினார். அந்தப் பத்து உபநிஷத்துக்களை எடுத்துக் கொண்டு, அவை எல்லாவற்றிற்கும் வரிக்கு வரி தனித்தனியாக விளக்கம் சொன்னார். அந்த வரிகளைப் பார்க்கும் போது பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் என்னென்ன வாக்கியங்கள் எடுத்துச் சொன்னாரோ அந்த அர்த்தங்கள், இந்த உபநிஷத்து பாஷ்யத்திலும், அப்படியே கொஞ்சம்கூட மாறாமல் இருக்கிறது. அதுதான் ஆதிசங்கரர் பண்ணிய ஒரு விசேஷம் !

மற்றவர் எல்லோரும் ஒவ்வொன்றுக்கும் ஒரு அர்த்தம் பண்ணுவார்கள். ஆதிசங்கரர், பிரம்ம சூத்திரத்தை எடுத்துக் கொண்டு அதற்கு உபநிஷத்துப் பாஷ்யத்தில் என்ன சொன்னாரோ, அதையே நாம் எடுத்துக் கொண்டு வேதாந்த பாஷ்யத்தில் பார்த்தாலும் வரும்.

எதற்கு வேதாந்த பாஷ்யத்தை இரண்டு முறை பண்ண வேண்டும். ரிபிடிஷனா... இல்லை. அந்த ஒரு வரிக்கு மட்டும் அர்த்தம் சொல்லி அதற்குத் தாத்பர்யம் இதுதான்; அதற்கு நிர்ணயம் இதுதான் என்று சொன்னார்.

முன்வாக்கியம், பின்வாக்கியம், மத்தியவாக்கியம் என்று எல்லாவற்றையும் பார்த்து ஆராய்ந்து அலசி, இதுதான் இதற்கு நிர்ணயம் என்று சொல்லி விளக்கினார். அப்படி ப்ரஷ்தானதே பாஷ்யம் என்ற மூன்று வழிமுறைகளைத் தரும் நூல்கள் என்றும் கூறினார்.

முதலில் படித்தவர்களுக்கும், வித்வான்களுக்கும் புரிய வைப்பதற்காக வாதவிவாதம் பண்ணி, சர்ச்சை பண்ணி, தீர்மானமும் எண்ணி எழுதப்பட்டது தான் இந்த நூல்கள் மூன்றும்.

நம்மைப் போல சாமான்யர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக இந்த மூன்று நூல்களில் உள்ளவற்றைத் தானே அனுபவித்து ஆராய்ந்து - அந்த விஷயங்களையெல்லாம் சுருக்கமாக பிரகடன கிரந்தங்கள் என்றும் விவேக சூடாமணி, உபதேச ஆசை போன்ற நூல்களையெல்லாம் எழுதினார்.

அங்கே பாஷ்யங்களை மாத்திரம் வேதத்திற்கு விரோதமில்லாமல் எழுதினார். இங்கே அதே கருத்தை சொந்த வாக்கியத்திலே பிரகடனக் கிரந்தங்கள் என்று எழுதினார். இது கொஞ்சம் படித்தவர்களுக்காக.

(தொடரும்)

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



**ஞானானந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்**
**ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவமுபாஸ்மாஹே**

இந்த ஹயக்ரீவ கல்விவளாக இடத்திலே இந்த ஊருக்கு பிரசித்தியை அளித்த ஸ்ரீ ராமானுஜருடைய ஆயிரமாவது சஹஸ்ராப்தி உற்சவத்தை விசேஷமான முறையிலே பலபேரும் ஆங்காங்கு கொண்டாடி வருகிறார்கள். இங்கு லிப்கோ அவர்கள் மூலமாக, ஒரு வரலாற்று கண்காட்சியும், நல்ல சமய நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். பஜனைகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மே ஐந்தாம் தேதி வரையிலே விசேஷமான இந்த ஏற்பாடுகளை இங்கு செய்திருக்கிறார்கள்.

அவருடைய குடும்பத்தின் மூலமாக, நமது காஞ்சி பெரியவர்களின் ஆசி பெற்று, ஏற்கனவே விஷ்ணு சஹஸ்ரநாமம், கோத்ர ப்ரவரங்கள் என்ற புஸ்தகத்தை அவர்கள் விரும்பி, அதை பிரசாரம் செய்ய வேண்டும் என்று, அவருடைய திருவுள்ளத்தை அறிந்து டி டி வாசு அவர்களுடைய துணையோடு, அங்கு வந்து பெரியவர்களை சேவித்து, அருளாசை எல்லாம் பெற்று இருக்கிறார். தற்போது இந்த நிகழ்ச்சி நடத்த இருப்பதை சொன்னவுடனே, அவர்கள், ‘‘செய்வது ஆயிரம் ஆண்டு விழா, செய்பவர்கள் இது போன்று விஷ்ணு சஹஸ்ரநாமத்தையும், இது போன்று பல்வேறு, ஆன்மீகப் பணிகளை, ஆன்மீகப் பிரசுரங்களை செய்து வரக் கூடிய, பல்வேறு கிராமக் கோவிலுக்கு எல்லாம் சடாரியை அளித்துக் கொண்டு, அந்த கைங்கரியத்தையும், பல்வேறு பக்தி கைங்கரியங்களையும் செய்து கொண்டு

இருக்ககூடிய குடும்பத்தார் இதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு என்பது ஒரு தெய்வீகமான ஒரு பக்தியை, மேன்மையான கலாசாரத்தை, வளர்த்த, வளர்த்துக் கொண்டு இருக்ககூடிய ஒரு பிரதேசம். அந்த ஆன்மீகத்துனுடைய வேர் ஆன்மீகத்தின் மூலமாக, வேதம் தமிழ் என்று சொன்னார்களே, அந்த வைதீக மதத்தை, இந்த தமிழ்நாட்டிலே, பல்வேறு நிலைகளிலே பரப்பிக் கொண்டு வந்திருக்கிறார்கள் ஜீயர் ஸ்வாமிகள். மிக அருமையாக பிரமாணங்கள் என்றால் என்ன, ஸ்ருதி என்றால் என்ன, ஸ்ம்ருதி என்றால் என்ன, அதை ஒட்டி அனுபவம் என்றால் என்ன, இதைப் பற்றி எல்லாம் விவரமாகச் சொல்லி, சாஸ்திரத்தை நாம் எப்படி பார்க்க வேண்டும், உலகத்தை சாஸ்திரம் எப்படி பார்க்கிறது, என்கிற விதத்திலே, இந்த விவரமாக அவர்கள் தெளிவாக இரண்டு மொழிகளும் முக்கியம்-வடநாட்டு மொழி, தென்னாட்டு மொழி,

இன்று காலையில்தான் ஒருவர் காண்பித்துக் கொண்டிருந்தார். பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம் என்று இங்கிலீஷ்காரர்கள், வேறு எங்கோ வெளிநாட்டிலே, பள்ளிக் கூடத்திலே குழந்தைகள் பஜகோவிந்தம் சொல்லுகிறார்கள். எங்கோ ஐரோப்பாவிலே, ஒரு பள்ளிக்கூடத்திலே சொல்லிக்கொடுக்கிறார்கள். பகவத் கீதை சொல்லுகிறார்கள்.

இரண்டு மொழிகளிலும் சேர்ந்து மணிப்ப்ரவாளம்-பள்ளித்தோர் ஆலயாம் ------ப்ரணதோஸ்மகம்.'' அதாவது மணிப்ரவாலத்திலே, இரண்டு மொழியும் சேர்த்து வளர்த்து, இந்தத் தமிழ்நாட்டிற்கு பெருமையை தேடித் தந்திருக்கிறார்கள். மேன்மையை அளித்து இருக்கிறார்கள். பக்தியின் மூலமாகத்தான் நமது நாகரீகம் மேலானது என்பதை வெளியுணர்த்த முடியும்

இந்தியாவிலே உயர்ந்த நாகரீகம் என்று சொன்னால், பக்தியை பிரதானமாகக் வைத்துக் கொண்டு, உண்மையை பிரதானமாகக் வைத்துக் கொண்டு, அது கொஞ்ச நேரம் உண்மை என்று எல்லாம் சொன்னார், இது நீண்ட, நிரந்தர உண்மை, நம்முடைய சனாதன தர்மம் என்பது நேற்றைக்கு இருந்தது. இன்று இருக்கிறது. நாளைக்கும் இருக்கப் போகிறது. அந்த அழியாத, குறைவில்லாத இந்த உண்மையை காப்பாற்றி, வாழ்க்கையினுடைய இந்த உண்மையை கடைபிடித்துக் காப்பாற்றியவர்கள், இன்னும் பெரியவர்கள் எல்லாம் காப்பாற்றியவர்கள்,

காஞ்சிபுரத்திற்கும், ராமானுஜருடைய சரித்திரத்திற்கும் நீண்ட காலத்தொடர்பு , பல வருஷங்கள் அங்கு வசித்தவர். இந்த ஊரிலே பிறந்திருந்தாலும், காஞ்சிபுரத்திலே, அங்கு பெருநாட்கள் வசித்தவர். பல்வேறு தலைப்பில் இங்கு பிரசங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சமுதாய நோக்கம் என்ன, வெவ்வேறு கலை விஷயங்கள், வெவ்வேறு அறிஞர்களைக் கொண்டு பல்வேறு தலைப்பில் பிரசங்கம் ஏற்பாடு

செய்திருக்கிறார்கள். நம்முடைய நாகரீகம் உயர்ந்தது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதே சமயத்திலே, அதை நாம் உணர்ந்து இருக்கிறோமா என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த உயர்ந்த நாகரீகத்தை கற்றுக்கொள்வது எங்கே?, கோவிலிலேயா அல்லது வீடுகளிலேயா அல்லது பள்ளிக்கூடங்கலேயா, வேறு எங்கு கற்றுக்கொள்வது? மடங்களிலேயா? இதைக் கற்றுக் கொடுக்க வேண்டிய இடங்களிலே, அதற்கான வாய்ப்புகளும், வசதிகளும், அதற்கான சில இடங்களில் அனுமதி கூட தேவைப்பட வேண்டிய சூழ்நிலையிலே, நம்முடைய வரலாற்றை வெளிநாட்டை சார்ந்தவர்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்று பெருமைப் பட்டு சொல்லிக் கொண்டாலும், நம்முடைய வரலாறை நாம் எங்கிருந்து வந்தோம், எதற்க்காக வந்தோம், நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்ற தெளிவை, விளக்கத்தை பெறுவது எங்கே, என்பது குறைந்தவிட்ட நிலையிலே, இது போன்ற ஆன்மீக நிகழ்ச்சிகள் மேலும் தேவையாகின்றன. ஒரு ஐம்பது வருஷத்து அதிசயம் இருந்தாலோ அல்லது நூறு வருஷத்து அதிசயம் இருந்தாலோ, அதை வெளிநாட்டில் கொண்டாடும் விதமே விமர்சையாக இருக்கிறது.

ஆயிரம் வருஷமாக நடைபெற்று வரக்கூடிய ஒரு பக்தி பிரசாரத்தை, சேவை பிரசாரத்தை தெய்வீக, இலக்கிய பாதுகாப்பு செய்து வருகிறார்கள். பிரபந்தத்தின் மூலமாக தமிழ் இலக்கியம் பாதுகாக்கப்பட்டு, பக்தி உணர்வு பாதுகாக்கப்பட்டு, நல்ல சிந்தனை வளர்க்கப்பட்டு, அந்த ஆஸ்திகம் என்பது வளர்ந்து கொண்டு வருகிறது.

ஆஸ்திகம் என்பது, எந்த ஒரு உருவ வழிப்பாட்டை நாம் மேற்கொண்டாலும், அதில் ஆஸ்திகம் என்பது முதல் விஷயம். அந்த ஆஸ்திகம் என்பது சாஸ்திரங்களை நம்பி வாழ்வது, சாஸ்திரங்களை ஒத்துக்கொண்டு வாழ்வது, சாஸ்திரத்தின் வழி நடப்பது. அந்த சாஸ்திரங்களை சொல்லித் நமக்குத் தருவது நமது வேதங்கள், அந்த வேதங்களின் கருத்துக்களை பல்வேறு ரூபத்திலே, ஆழ்வார்களும் சரி, பல்வேறு இலக்கியங்களும் சரி, மக்களுக்கு எடுத்து சொல்லி, எளிமையாக எடுத்துச் சொல்லி, வேதக் கருத்தை, புரிந்து கொள்ளவதற்கு சுலபமாக, எளிமையாகக் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, டெலிவரி என்று சொல்கிறார்களே, door delivery என்று சொல்லுகிறார்களே, இந்த காலத்திலே, வீடு தேடி வந்து கொடுப்பது-அது போன்று அவர்களுக்கு தெரிந்த மொழியிலே, அழகாக, ஒரு ஸ்வரத்தோடு, அலங்கார சாஸ்திரத்தோடு, இந்த அருமையான பணி, சிறப்பான முறையிலே, ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயத்திலே, பல்வேறு கோவில்களையும் நல்ல முறையிலே பராமரித்து, பக்தி என்கிற மணத்தை பரப்பி வருகிறார்கள்.

# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்



ராகம் பஹாடீ

**நைனா லோபீ ரே பஹுரி சகெ நஹி ஆய் ரோம் ரோம் நக சிக**
**சவி நிரகத லல்கி ரஹே லலசாய் ॥**
**மைம் டாடீ க்ருஹ் ஆப்னே ரீ மோஹன் நிகஸ் ஆய்**
**பதன் சந்த்ர பரகாஸத் ஹேஸ் மந்த மந்த முஸுகாய் ॥**
**லோக் குடும்பீ பர்ஜ பரஜஹீம் பதியாம் கஹத பனாய்**
**சன்சால நிபட் அடக் நஹீம் மானத் பர ஹாத கயே பிகாய்**
**பலோ கஹோ கோ ஈ புரோ கஹோ மைம் ஸப் ல ஈ ஸீஸ் சடாய்**
**மீரா ப்ரபு கிடிதரன லால் பின் பல் சின் ரஹ்யோ ந ஜாய் ॥**

*என் கண்ணுக்கினியனை கண்ணனைப் பார்த்தேன். அவன் தோள் கண்டேன், தோளே கண்டேன், தாள் கண்டேன் தாளே கண்டேன் பார்வை அவனில் தோய்ந்தது. என் வீட்டில் இருந்தபோது அந்த மாயாவி கடந்து போனான். அவனுடைய சந்த்ர வதனமும், மந்தஸ்மிதமும் ஐயோ ! என்ன சொல்வேன். ஊர் அலர் , குடும்ப அலர் எதுவும் பேசும். நான் பொறுத்துக் கொள்வேன் குன்றம் ஏந்தி குளிர் மழை காத்தவனை விட்டு ஒரு க்ஷணம் இந்த மீரா வாழாள். கிரிதரனை விட்டு இவள் வாழாள்.*

**மைம் விரஹின பைட ஜாகூம் ஜகத் ஸப் ஸோவீ ரீ ஆலி**
**பிர்ஹின பைட ரங்க மஹல் மைம் மோதியான் கீ லட் போவே**
**ஏக பிரஹின ஹம் ஐஸீ தேகீ அம்ஸுஅன் மாலா போவே**
**தாரா கின் கின் ரைன் பிஹானி ஸுக் கீ கட கப் ஆவே**
**மீரா கே ப்ரபு கிரிதர் நாகர் மில் கே பிச்சுட் ந ஜாவே ॥**

*ஊர் உறங்குது, உலகம் உறங்குது நான் இந்த மீரா உறங்கவில்லை கண்ணனிடமிருந்து பிரிக்கப்பட்டேன். இந்த அரண்மனையில் தனியாக தனியாக இருக்கிறேன், முத்து மாலை கோர்க்கிறேன். கண்ணீர்த் துளிகளாலான முத்து மாலையைக் கோர்க்கிறேன். நக்ஷத்ரங்களை எண்ணிக் கொண்டு இரவைக் கழிக்கிறேன். அவனோடு சேரும் அந்த நாளும் வந்திடாதோ! என்னைச் சந்தித்தபின் கிரிதரன் என்னை விட்டு போகாமல் இருக்க !*

# ராஜதரங்கிணி

பி. ஆர். கண்ணன்

## காஷ்மீரின் இயற்கையழகு

குளிர்காலத்தில் சுடுநீர் ஊற்றுக்களும், வெய்யிலில் பயங்கர மிருகங்களற்ற நீந்தவசதியான நதிகளும், இளைப்பாறுவதற்கேற்ற நதிக்கரை அமைப்புகளும் வெகு அழகும், சௌகர்யமும் வாய்ந்தவை.

**வித்யா வேஶ்மாநி துங்காநி குங்குமம் ஸஹிமம் பய: ।**

**த்ராக்ஷேதி யத்ர ஸாமாந்யமஸ்தி த்ரிதிவதுர்லபம் ।। 42 ।।**

''ஸ்வர்கத்தில்கூட அரிதாக உள்ள உயர்கல்வி, நெடிதுயர்ந்த மாளிகைகள், குங்குமப்பூ, குளிர்நீர், த்ராக்ஷை முதலான வஸ்துக்கள் நிறைந்த பூமி காஷ்மீர்.'' ஶாரதாபீடம் கல்விக்கு ப்ரஸித்திபெற்ற இடமாக, நாலந்தா, தக்ஷஶிலாவைப்போல், பன்னாட்டு புலவர்கள் கூடி விவாதிக்கும் ஸபையாக விளங்கிற்று.

**த்ரிலோக்யாம் ரத்நஸூ: ஶலாக்யா தஸ்யாம் தநபதேர்ஹரித் ।**

**தத்ர கௌரீகுரு: ஶலோ யத்தஸ்மிந்நபி மண்டலம் ।। 43 ।।**

மூவுலகங்களிலும் ரத்னங்களின் சுரங்கமான பூமி புகழ்ச்சிக்குரியது; அதிலும் குபேரனின் திசையான வடதிசை இன்னும் உயர்ந்தது; அங்கும் ஸாக்ஷாத் பார்வதிதேவியின் பிதாவான ஹிமவானின் இருப்பிடம் அதி உயர்வு; அங்கும் காஷ்மீரமண்டலம் வெகுஉயர்வு.

**ராஜாக்களின் சரித்ரம்**

மஹாபாரத காலத்திலிருந்து, கோநந்தர் என்கிற ராஜா வரையில் 52 ராஜாக்களின் சரித்ரத்தை, சரியாக எந்த கவியும் பதிவு செய்யாவிடினும், தன்னுடைய முயற்சியினால் கண்டெடுத்த சில விஷயங்களைப் பகிர்கிறார் கல்ஹணர்.

**புஜவநதருச்சாயாம் யேஷாம் நிஷேவ்ய மஹௌஜஸாம்**

**ஜலதிரஶநா மேதிந்யாஸீதஸாவகுதோபயா ।**

**ஸ்ம்ருதிமபி ந தே யாந்தி க்ஷ்மாபா விநா யதநுக்ரஹம் ப்ரக்ருதிமஹதே குர்மஸ்தஸ்மை நம: கவிகர்மணே ।। 46 ।।**

ஸமுத்ரம்சூழ் பூமி, ப்ரஸித்திபெற்ற ராஜாக்களின் குடையின் கீழ், காட்டு மரங்களின் நிழலில் வழிப்போக்கர்கள் ஓய்வெடுப்பதுபோன்று, சாந்தியுடனும், பாதுகாப்புடனும் இருக்கையில், ஒரு கவியின் கலைவடிவமின்றி, அது சரித்ரத்தில் நிலைத்து நிற்பதில்லை. கவியின் ஸாதனை மகத்தானது; அந்த ஸாதனையை வணங்குவோம்.

**ராஜா கோநந்தர்- I … லவர்**

ஸ்ரீக்ருஷ்ணரின் காலத்தில் கோநந்தர்-I காஷ்மீரை ஆண்டுவந்தார். அவர் ஜராஸந்தன் பக்கமிருந்ததால், க்ருஷ்ணர் கையில் மரணமடைந்தார். அவருடைய புத்ரன் தாமோதரர்-I ம், காந்தாரத்தில் ஒரு ஸ்வயம்வரத்தில் வேறொரு யுத்தத்தில் க்ருஷ்ணர் கையிலேயே உயிர்விட்டார். தாமோதரர் I-ன் ராணி அப்போது கர்ப்பவதியாக இருந்தாள். அவளை காஷ்மீர் ராஜஸிம்மாஸனத்தில் அமர்த்தினார் க்ருஷ்ணர். ஒரு விதவையை ராஜபீடத்தில் அமர்த்தியதை பலரும் குற்றம் கூறினர். அப்போது க்ருஷ்ணர் சொன்னது:

**கஶ்மீரா பார்வதீ தத்ர ராஜா ஜ்ஞேய: ஶிவாம்ஶஜ : ।**
**நாவஜ்ஞேய: ஸ துஷ்டோபி விதுஷா பூதிமிச்சதா ।। 72 ।।**

'காஷ்மீரபூமி ஸாக்ஷாத் பார்வதிதேவியே; ராஜா சிவாம்ஶம்; நலனை விரும்பும் கற்றோன், ராஜா துஷ்டனாயினும், அவனை அவமதிக்கலாகாது'. அதனால் கர்ப்பவதியான விதவாராணியை ராஜபீடத்தில் அமர்த்தியது சரியே என்றார் க்ருஷ்ணர்.

காலக்ரமத்தில் கோநந்தர்- II என்கிற புத்ரன் பிறந்தான். குழந்தைக்கு விதிப்படி ஜாதகர்மா முதலிய ஸம்ஸ்காரங்கள் நிறைவேற்றப்பட்டன என்கிறார் கல்ஹணர். வைதீக தர்மத்தினை எவ்வாறு முறைப்படி எல்லோரும் பின்பற்றி வந்தனர் என்பதை வெகு அழகாக சொல்கிறார். குழந்தையையே ராஜாவாக்கினர். குழந்தையாக இருந்த காரணத்தினால், மஹாபாரத யுத்தத்தில் காஷ்மீர ராஜா பங்கு கொள்ளவில்லை. அடுத்தபடியாக லவர் என்கிற ராஜாவைப்பற்றிப் பேசும் கல்ஹணர், அவர் பல யுத்தங்களை செய்தது, லொலோரே என்ற நகரத்தை நிர்மாணித்தது, ஒரு லக்ஷம் வீடுகள் கற்களால் கட்டியது, லதேரி என்ற ஊரில் ப்ராம்மணர்களுக்கான அக்ரஹாரங்கள் கட்டிக் கொடுத்தது எல்லாவற்றையும் சொல்கிறார். லவரின் புத்ரர் குஷர் என்ற ராஜாவும் குருஹாரா என்ற ஊரினை நிர்மாணித்து, பல கல்வீடுகளையும், அக்ரஹாரங்களையும் கட்டிக் கொடுத்தார்.

**ராஜா ககேந்த்ரர்**

குஷரின் புத்ரர் ககேந்த்ரர் பற்றி கவியின் வர்ணனை:

**ஸ காகிகோநமுஷயோ: கர்தா முக்யாக்ரஹாரயோ: । ஹரஹாஸஸிதை: க்ருத்யை: க்ரீதாம்ல்லோகாந்க்ரமாத்யயௌ ।। 90 ।।**

ககேந்த்ரர் காகி, கோனமுஷா என்ற இரு முக்ய அக்ரஹாரங்களை நிறுவினார். காலக்ரமத்தில், அவர், சிவபெருமானின் சிரிப்புப் போன்ற ப்ரகாசமான ஸேவைகளினால், உயர்ந்த லோகங்களை அடைந்தார்.

**ராஜா ஸுரேந்த்ரர்**

ககேந்த்ரரின் புத்ரர் ஸுரேந்த்ரரின் ராஜ்யத்தை வெகுவாகப் புகழ்கிறார் கவி.

**ஶதமந்யு: ஶாந்தமந்யோர்கோத்ரபித்கோத்ரரக்ஷிண: ।**

**லேபே யஸ்ய ஸுரேந்த்ரஸ்ய ஸுரேந்த்ரோ நோபமாநதாம் ।। 92 ।।**

‘தேவேந்த்ரன் ஆயிரம் கோபதாபங்களைக் கொண்டவராகவும், மலைகளை (அல்லது குடும்பங்களை; இந்த்ரன் மலைகளின் இறக்கைகளை வெட்டி வீழ்த்திய விவரம் புராணங்களில் உள்ளது) உடைத்தவராகவும் இருப்பதால், ஸுரேந்த்ரருக்கு அவரை உவமை கூற இயலாது; ஸுரேந்த்ரரோ கோபத்தை ஜயித்தவர்; மலைகளையும், குடும்பங்களையும் காத்தவர்.‘ ஸுரேந்த்ரர் வீடுகள், அக்ரஹாரங்கள், புத்த விஹாரம் ஆகியவற்றை நிறுவியவர். கல்ஹணர் முதல்முதலாக புத்த விஹாரம் பற்றிய விஷயத்தை இங்கு பேசுகிறார்; இப்போது புத்த மதத்தின் ஊடுருவல் காஷ்மீரில் தொடங்கியுள்ளது.

**ராஜா கோத்ரர்- வேறு வம்சத்திலிருந்து**

ஸுரேந்த்ரர் புத்ரனில்லாமல் பரகதி அடைந்தமையால், வேறு வம்சத்தைச் சார்ந்த கோத்ரர் ராஜாவானார். அவரும் கொடையாளியாக இருந்தார்; அக்ரஹாரங்களை தானம் செய்தார்.

**ராஜா ஸுவர்ணா**

கோத்ரரின் புத்ரர் ஸுவர்ணா ஏழைகளுக்கு தங்கம் வழங்கினார். கராலா என்ற இடத்தில் ஸுவர்ணமணி என்ற கால்வாயை நிர்மாணித்தார். ஸுவர்ணாவிற்குப்பின் வந்த அவருடைய புத்ரன், பேரன் ஆகியோரும் நல்ல ராஜாக்களாக இருந்தனர்.

**ராஜா அசோகர்**

ப்ரஸித்தி பெற்ற அசோகர் பின்னர் அரசரானார். அவர் புத்த மதத்தைத் தழுவினார். ஆகாயத்தைத் தொடும் புத்த விஹாரங்களைக் கட்டினார்.

**ஸ ஷண்ணவத்யா கேஹாநாம் லக்ஷை: லக்ஷ்மீஸமுஜ்ஜ்வலை: ।**

**கரீயஸீம் புரீம் ஸ்ரீமாந்ஸ்சக்ரே ஸ்ரீநகரீம் ந்ருப: ।। 104 ।।**

''ஸ்ரீநகரி என்ற பெருமைவாய்ந்த நகரத்தை நிறுவி, 96 லக்ஷம் வீடுகள் கட்டிக் கொடுத்தார்.'' இந்த ஸ்ரீநகர், இப்போது நாமறியும் ஸ்ரீநகர் அல்ல என்ற அபிப்ராயம் இருக்கிறது. ஸ்ரீவிஜயேஸ்வரர் கோவிலின் வெளிச்சுவரை மாற்றி, கல்லினாலான ப்ராகாரத்தைக் கட்டினார். புதிதான அசோகேஸ்வரர் ஆலயத்தையும் நிறுவினார்.

**ம்லேச்சை: ஸஞ்சாதிதே தேஸே ஸ ததுச்சித்தயே ந்ருப: ।**

**தப: ஸந்தோஷிதால்லேபே பூதேஸாத்ஸுக்ருதீ ஸுதம் ।। 107 ।।**

'தேசத்தில் ம்லேச்சர்களின் (க்ரேக்கர்களாக இருக்கும்) ஊடுறுவல் அதிகமானவுடன், அசோகர் ஸ்ரீபூதேஸ்வரரை நோக்கி கடும் உபாஸனை செய்து, ஒரு புத்ரனைப் பெற்றார். ஸ்ரீபூதேஸ்வரர் ஹரமுகம் என்ற குன்றின்மீது உள்ளார்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 7

**‘வ்யாஸாய விஷ்ணுரூபாய**
**வ்யாஸரூபாய விஷ்ணவே**
**நமோ வை ப்ரஹ்ம நிதயே**
**வாஸிஷ்டாய நமோ நம: //’**

விஷ்ணு வடிவங்கொண்ட வ்யாஸராகவும், வ்யாஸ வடிவங் கொண்ட விஷ்ணுவாகவும் வேதத்தின் பொக்கிஷமாகவுமுள்ள அவருக்கு நமஸ்காரம். வசிஷ்ட குலத்துதித்த அவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.



**த்வாபரே த்வாபரே விஷ்ணு: வ்யாஸ ரூபேண ஸம்ஸ்தித:** என்ற வாக்கியத்தின்படி பகவான் விஷ்ணு ஒவ்வொரு த்வாபர யுகத்தின் கடைசி பாகத்தில் வ்யாஸராக அவதரிக்கிறார். பகவானிடத்தில் அமைந்துள்ள இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஆகிய மூன்றில் ஞான சக்தியின் அவதாரமாக வந்தவர் வ்யாஸர் என்பது வாசஸ்பதி மித்ரரின் வாக்கு. **ஞான அத்யவதாராய நமோ பகவதோ ஹரே:**

இவருக்குப் பல பெயர்கள் உள்ளன. வேதங்களை நான்காகப் பகுத்து சீடர்கள் மூலம் உலகில் பரப்பியதால் வேத வ்யாஸர் என்று பெயர். கங்கையில் ஒரு இருண்ட தீவில் பிறந்ததால் க்ருஷ்ண த்வைபாயணர் என்று பெயர். கரிய நிறமுடையவராதலால் க்ருஷ்ணர் என்று பெயர். பதரீ (இலந்தை) மரங்கள் நிறைந்த வனத்தில் தவம் செய்த காரணத்தால் பாதராயணர் எனப் பெயர். உபநிஷதங்களின் ஸாரத்தை 555 ஸூத்ரங்களில் வேதாந்த ஸூத்ரங்கள் அல்லது ப்ரஹ்ம ஸூத்ரங்கள் என்று வெளியிட்டதால் ஸூத்ரகாரர் என்று பெயர். இவ்வாறு பல பெயர்களால் வழங்கப்பட்டார்.

ஒன்றாயிருந்த வேதத்தை ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வ வேதம் என நான்காகப் பகுத்தார். தனது நான்கு சிஷ்யர்களில் ரிக்வேதத்தைப்

பைலருக்கும், யஜுர் வேதத்தை சைவம்பாயனருக்கும், ஸாம வேதத்தை ஜைமினிக்கும், அதர்வ வேதத்தை ஸுமந்து எனப்படும் அங்கிரஸுக்கும் கொடுத்து உலகில் பிரசாரம் செய்ய வைத்தார். இதிஹாஸ புராணங்களை ரோமஹர்ஷணர் மூலம் பரப்பினார்.

ஐந்தாவது வேதம் என்று கருதப்படும் உயர்ந்த இதிஹாஸமான மஹாபாரதத்தை எழுதி வேத தர்மங்களை நேரடியாக அறிய முடியாதவர்களும் எளிதில் அறியும் வண்ணம் செய்தார். 18-புராணங்களையும், உபபுராணங்கள், 18-ஐயும் தொகுத்தார். ஞான பரம்பரையின் கான வீச்சாக அவதரித்தவர் இவர்.

**‘வ்யாஸம் வஸிஷ்ட நப்தாரம் சக்தே: பௌத்ரமகல்மஷம்।**
**பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம் ॥’**

‘வஸிஷ்டருடைய கொள்ளுப் பேரனும், சக்தி முனிவரின் பேரனும், களங்கமற்றவரும், பராசர புத்திரரும், சுகருடைய தந்தையும், தவத்தையே செல்வமாக உடையவருமான வ்யாஸரை நமஸ்கரிக்கிறேன்.

வேத வ்யாஸர் நைஷ்டிக பிரம்மசர்ய விரதத்திலிருந்த போதிலும் ஒரு சமயம் புத்திரன் வேண்டுமென்ற இச்சை இவர் மனதில் எழுந்தது. பரமேச்வரனைக் குறித்துத் தவம் செய்தார். ஆகாயத்தைப் போன்ற களங்கமற்றவனாக ஒரு புத்திரன் பிறப்பான் என்று இறைவன் அருள்புரிந்தான். பிறகு ஒரு சமயம் அக்னி எடுக்கும் பொருட்டு அரணிக் கட்டையைக் கடைந்து கொண்டிருந்தார். அப்போது க்ருதாசீ என்ற ஒரு அப்ஸரஸ்திரீ அவரெதிரில் வந்தாள். அவளது அழகைக் கண்டு வியாஸர் மனதில் காமம் எழவும் வீரியம் வெளிப்பட்டு விட்டது. தெய்வ ஸங்கல்பத்தால் அந்த வீரியத்தினின்று ஸ்திரீ சம்பந்தமில்லாமல் ஒரு குழந்தை தோன்றியது. அதுதான் சுகப்பிரம்மம். பகவானின் ஞான சக்தியாகத் தோன்றிய வ்யாஸரிடம் ஞானப் பழமாக ஞானக் கதிரவனாக அவதரித்தவர் சுகர்.

வேதங்களைத் தொகுத்துப் பிரித்துக் கொடுத்து பிரச்சாரம் செய்ததற்கு, மஹாபாரதத்தை அளித்ததற்கு, வேதாந்த ஸுத்ரங்களை எழுதியதற்கு, புராணங்களைக் கொடுத்ததற்கு, எல்லாவற்றிற்கும் மேலாக ஞானத் திருவுருவாக சுகாச்சாரியாரை அளித்ததற்கு பாரத சமூகம் வ்யாஸருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. இவருக்கு நாம் என்ன கைமாறு செய்ய முடியும்? இருகரம் கூப்பி விழுந்து நமஸ்கரிக்கலாம். **நமோஸ்து தே வ்யாஸ விசால புத்தே.**

வ்யாஸ ஸ்மிருதி. வ்யாஸ சிக்ஷா என்ற இரு தர்மசாஸ்திர நூல்களும் இவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. இவர் ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர். வ்யாஸ பூர்ணிமா எனப்படும் ஆஷாட மாதத்து பூர்ணிமா குருபூர்ணிமாவாக, வ்யாஸரது அவதார தினமாகக் கருதப்படுகிறது. ஸம்ப்ரதாய பேதமின்றி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசார்ய புருஷர் வியாஸர்

ஸனகரிடமும் ஸனந்தனரிடமும் கல்வி கற்ற இவர் வாக்கிலிருந்து அத்வைத சித்தாந்தமே வெளிப்பட்டுக் கொண்டிருந்தது என்பது இவரால் இயற்றப்பட்ட மற்றும் தொகுக்கப் பெற்ற நூல்களிலிருந்து காணலாம். ஒவ்வொரு சதுர்யுகத்தின் மூன்றாவது யுகமான த்வாபர யுகத்தின் இறுதியில் அவதரிப்பவர் என்பதால் இப்போது நடைபெறும் 28-ஆவது சதுர்யுகத்தில் அவதரித்த வியாஸர் அத்வைத ஆசார்ய பரம்பரையில் முக்கியமான இடத்தை வகிக்கிறார் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் இவர் தர்சனம் பெற்று, இவரது உபதேசத்தால் அத்வைத தர்சனத்தின் ஸத்யத் தன்மையையும், பெருமையையும் உணர்ந்தார். இவர் அருளாணையின்படியே அத்வைதத்தை சித்தாந்தப்படுத்த வாழ்வையே அர்ப்பணித்தார்.

வ்யாஸர் ஸரஸ்வதி நதிக்கரையில் வாழ்ந்தார் என அறியப்படுகிறது. எல்லா நூல்களையும் தொகுத்ததும், எழுதியதும் இந்த புனிதத் தலத்திலேயே. பதரிகாச்ரமத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் ஸரஸ்வதி நீர்வீழ்ச்சியின் அருகில் இவர் பெயரால் உள்ள குகை இவர் இருப்பிடத்தை நிர்ணயிக்கிறது.

தேவருலகத்துத் காமதேனுவும், கற்பதருவும் வேண்டியதைத் தரும். அதுபோல இம்மைக்கும், மறுமைக்குமான பேறுகள் அனைத்தையும் வ்யாஸர் அருளியுள்ள நூல்கள் கேட்ட மாத்திரத்தில் தரும் வல்லமை மிக்கவை.

வேதநெறி தழைக்க வந்த அவதாரம் வ்யாஸாவதாரம். அத்வைத போத நெறியை உலகறியச் செய்ய வந்த அவதாரம் வ்யாஸாவதாரம். வேத தாத்பர்யம் அத்வைதத்திலேயே, எனது தாத்பர்யமும் அத்வைத ப்ரம்ம நிஷ்டையிலேயே என்பதை எல்லா நூல்களிலும் தெளிவுறக் காட்டினார். அத்வைத அனுபூதி நிலை எப்படிப்பட்டது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டும் பொருட்டே லீலா நிமித்தமாக சுகாசார்யாளை சிருஷ்டித்தார். அத்வைத ஆசார்ய பரம்பரையில் அடுத்து வருபவர் ப்ரும்ம நிஷ்டரான சுகாச்சார்யார்.

*(வளரும்)*

# சித்திரை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15-05-2023 | திங்கள் | ஏகாதசி |
| 16-05-2023 | செவ்வாய் | த்வாதசி |
| 17-05-2023 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 31-05-2023 | புதன் | ஸர்வ நிர்ஜல ஏகாதசி |
| 01-06-2023 | வியாழன் | ஸ்வாதி வேத பாராயணம் த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 02-06-2023 | வெள்ளி | வைகாசி விசாகம் |
| 03-06-2023 | சனி | ஸ்ரீஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் ஜயந்தி அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 05-06-2023 | திங்கள் | ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆஸ்ரம ஸ்வகார ஜயந்தி மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 07-06-2023 | புதன் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 08-06-2023 | வியாழன் | அவிட்டம் தேர் |
| 09-06-2023 | வெள்ளி | அவிட்டம் வேத பாராயணம் |
| 14-06-2023 | புதன் | ஏகாதசி ; கூர்ம ஜயந்தி |
| 19-05-2023; 26-05-2023; 02-06-2023; 09-06-2023 | | |
| வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# முகாம் நிகழ்ச்சிகள்

தொடர்ச்சி

*மார்ச் 3* - கோவூர் முகாமில்ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை முடித்து ஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள்.



*மார்ச் 4* - கொவ்வூரு கோதாவரி நதி தீர்த்தத்தில் கோஷ்பாத க்ஷேத்திரத்தில் ஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 5வது ஆராதனை கார்யக்ரமம் நடைபெற்றது.

*மார்ச் 5* - ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை முடிந்த பிற்பகல் பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆராதனையை முன்னிட்டு ஏழு நாட்களாக நடைபெற்ற ரிக்வேத ஸம்ஹிதா ஹோமம் பூர்ணாஹுதியில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள். பின்னர் குழுமியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பண்டிட்டுகளுக்கு ஸ்ரீஸ்ரீ பெரியவா பிரசாதமும் வழங்கினார்கள்.

இதன் பின்னர் கொவ்வூரில் அனைத்து மதத்தினருக்காகவும் சுயம்வர பார்வதி ஹோமம் பூர்ணாஹுதியிலும் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள். மாலை விசேஷ பௌர்ணமி பூஜையும் நடைபெற்றது.

*மார்ச் 8* - தொடர்ந்து கொவ்வூர் முகாமில் இன்று மாலை பூஜ்யஸ்ரீ சுவாமிகள் புஸ்தக வெளியீட்டு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டுஅனுக்ரஹித்ததுடன் ஆந்திர கீர்வாண வித்யாவீட உறுப்பினர்களால் நடைபெற்ற ஸம்ஸ்க்ருத நாடகத்தையும் கண்டுகளித்தார்கள். பின்னர் குழுமியிருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

*மார்ச் 11 - முகாம் 9ம் தேதி கோதாவரி நதிக்கரையில் உள்ள ஹு்க்கும்பேட்டை என்னும் பசுமை நிறைந்த கிராமத்திற்கு வந்து சேர்ந்து அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் தரிசனம் தந்து அருளினார்கள். முகாம் 12ம் தேதி வரை நடைபெற்றது. 1936ல் ஸ்ரீஸ்ரீ மஹாபெரிவா தங்கியிருந்து ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை செய்த பழமையான க்ருஹத்திற்கு ஸ்ரீஸ்ரீ பெரியவா விஜயம் செய்து தரிசனம் செய்தார்கள். மூன்று கால பூஜை முடிந்த பின்னர் முகாம் அன்னாவரம் புறப்பட்டது.*

*மார்ச் 13 - அன்னாவரத்தில் உள்ள ஸ்ரீ வீர வேங்கட சத்யநாராயண சுவாமி தேவஸ்தானத்திற்கு மாலை விஜயம் செய்தார்கள்.*

*மார்ச் 16 - ஸ்ரீஸ்ரீ பெரியவாளின் சாந்த்ரமான உத்திராஷாட திருநக்ஷத்திர தினமானதால் காலை அன்னாவரம் கோவிலில் விசேஷ அபிஷேகங்கள் செய்வித்தார்கள். தொடர்ந்து முகாமில் பம்பா சத்திரத்தில் நடைபெற்ற ஸ்ரீ மஹாருத்ர ஹோமத்தில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.*

*ஹைத்ராபாத் நகரில் உள்ள ஸ்ரீ கணபதி கோவிலில் 24.3.23 ல் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்ச்சிக்கும், ஸ்ரீ சங்கரா கண் மருத்துவமனை க்ருஹப்ரவேச நிகழ்ச்சிக்கும் அருளாசி வழங்கினார்கள்.*

*மார்ச் 18 - காலையில் காஞ்சிபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில் பிரசாதம் ஸ்ரீஸ்ரீ பெரியவாளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடித்த பின்னர் அன்னாவரம் தேவஸ்தான ப்ரோஹிதர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். மாலை முகாம் அன்னாவரத்திலிருந்து தேவரப்பள்ளிக்கு புறப்பட்டது.*

*மார்ச் 19 - இன்று அல்ப துவாதசியானதால் ஸ்ரீ சந்திரமொளலீஸ்வரர் பூஜை அதிகாலையிலேயே நடைபெற்று ஸ்ரீஸ்ரீ பெரியவா பக்தர்கள் அனைவருக்கும் தீர்த்த ப்ரசாதம் வழங்கி அருளினார்கள். மாலை விசேஷ ப்ரதோஷ பூஜையும் நடைபெற்றது.*

*மார்ச் 20 - ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடிந்த ஸ்ரீஸ்ரீ பெரியவா தேவரப்பள்ளியிலிருந்த பெட்ரலூரு புறப்படு முன்னர் ஸ்ரீ ஐய்யப்ப சுவாமி தேவாலயத்தில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கி அருளினார்கள்.*

*மார்ச் 21 - கடந்த இரவு ஸ்ரீஸ்ரீ பெரியவா பெட்ரலூரு அபயஹஸ்த சுப்ரமண்ய சுவாமி தேவாலயத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வஸந்த நவராத்ரி மறுநாள் துவங்கி விசேஷ பூஜைகள், ஹோமங்கள், வேதபாராயணம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளும்*

*பெட்ரவூரு மூகாமில் 10 நாட்கள் சிறப்பான முறையில் நடைபெற்றன. இந்நாட்களில் சென்னை, பெங்களூர், புனே போன்ற பெருநகரங்களில் இருந்தும் பக்தர்கள் திரளாக வந்து ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளை தரிசனம் செய்து அனுக்ரஹம் பெற்று சென்றவண்ணம் இருந்தார்கள்.*

***ஏப்ரல் 5*** *- பெடரவூரிலிருந்து முகாம் புறப்பட்டு 4.4.23 இரவு விஜயவாடா வந்து சேர்ந்தது. முகாம் விஜயவாடாவில் லப்பிபெட் பகுதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் நிலை பெற்றது. ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் பௌர்ணமி பூஜை மாலையில் சிறப்பாக நடைபெற்றது.*

*தொடர்ந்து 8.4.23 அன்று மாலை சித்தார்தா அகாடமியில் நடைபெற்ற பக்தர்கள் நிகழ்ச்சிக்கு விஜயம் செய்து அனுக்ரஹபாஷணம் வழங்கி ஆசி அருளினார்கள். பின்னர் விஜயவாடா கிளையின் சம்ப்ரதாயா பாடசாலைக்கு விஜயம் செய்து கட்டிடத்தின் ஒவ்வொரு தளத்திற்கும் சென்று வகுப்பறைகள், விஞ்ஞான கூடங்களையும் பார்வையிட்டு மாணவர்களுக்கும் சிப்பந்திகள் மற்றும் கூடியிருந்த பக்தர்களுக்கும் அனுக்ரஹபாஷணம் வழங்கி ஆசி வழங்கினார்கள். மேலும் இந்த தர்ம ஸ்தாபனத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகயிருந்து வரும் சிப்பந்திகள் மற்றும் நிர்வாகத்தினரையும் பாராட்டினார்கள்.*

*9.4.23 அன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடிந்து முகாம் லப்பிபெட்டிலிருந்து புறப்பட்டு விஜயவாடாவின் புறநகர் பகுதியான சின்ன காஞ்சிக்கு வந்து சேர்ந்தது.*

*10.4.23 சின்ன காஞ்சி சிற்றூரில் உள்ள ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி தேவாலயத்திற்கு காலை பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் விஜயம் செய்து தரிசனம் செய்தார்கள். விஜயவாடாவின் புறநகரில் அமைந்துள்ள இச்சிறு கிராமம் ''நன்னா'' என்றும் அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் காஞ்சி ஸ்ரீ பரமாசார்ய சுவாமிகளுக்கு அழகிய கோவில் ஒன்று ஸ்ரீ மடத்தின் பக்தர் ஒருவரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் சின்ன காஞ்சி என்று பெயரிடப்பட்டது. ஸ்ரீஸ்ரீ சுவாமிகளை வரவேற்க குழுமியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளாசி வழங்கினார்கள்.*

*மீண்டும் மறுநாள் 11.4.23 காலையிலும் பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்கள். ஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் அனுஷ நக்ஷத்திர தினமானதால்அவர்தம் சந்நிதியில்*

நடைபெற்ற ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். அனைவரும் ஸ்ரீஸ்ரீ ஆசார்யர்களின் அனுக்ரஹம் பெற்றுய்தார்கள்.

தொடர்ந்த முகாம் சின்ன காஞ்சியிலிருந்து குண்டூருக்கு மாலை புறப்பட்டு இரவு குண்டூர் ஸ்ரீ கோடாதேவி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி தேவாலயத்திற்கு பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்கள் வந்து சேர்ந்தார்கள். காலம் கடந்தாலும் ஸ்ரீ சுவாமிகளை வரவேற்க குழுமியிருந்த பக்தர்களிடையே நீண்ட அனுக்ரஹபாஷணம் வழங்கி ஆசி அருளினார்கள். 11.4.23 மற்றும் 12.4.23 ஆகிய இரு நாட்களிலும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்களால் மூன்று கால ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை நடைபெற்றது.

12.4.23 அன்று பூஜை முடிந்த பின்னர் பக்தர்களுக்கு ஸ்ரீஸ்ரீ ஆசார்யர்கள் தீர்த்த பிரசாதம் வழங்கி முடித்து மாலை ஓங்கோல் புறப்பட்டு சென்றார்கள்.

17.4.23 ஓங்கோலுக்கு வருகை தந்த ஸ்ரீஸ்ரீ பெரியவாளை சாலை இருபுறமும் கூடியிருந்து வரவேற்ற பக்தர்களுக்கு அருளாசி வழங்கிய வண்ணம் ஸ்ரீ பிரசன்ன சென்ன கேசவ பெருமாள் திருக்கோவிலுக்கு வந்தடைந்தார்கள். அவ்விடத்தில் குழுமியிருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அருளிச்செய்தார்கள். மாலை விசேஷ பிரதோஷ பூஜையும் நடைபெற்றது.

18.4.23 ஓங்கோல் முகாமில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜை முடித்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள்.

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : V.K.N. Enterprises, Mylapore,
Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# சாணக்ய ஸுபாஷிதம்

## ஒரே தடவை

**ந துர்ஜன; ஸாதுதஸாமுபைதி பஹுப்ரகாரைரபி ஸிக்ஷ்யமாண; ।**

**ஆமூலஸிக்த: பயஸா க்ருதேன ந நிம்பவ்ருக்ஷோ மதுரத்வமேதி ॥**

*எந்த விதத்தில் முயற்சித்தாலும் துர்ஜனன் நல்லவனாக மாட்டான். வேரிலிருந்து பால் சொரிந்தாலும் வேம்பு இனிக்குமா?*

## கசடறக் கல்வி

**அனந்த சாஸ்த்ரம் பஹுலாச்ச வித்யா அல்பச்ச காலோ பஹவச்ச விக்னா:**

**யத்ஸாரபூதம் ததுபாஸனீயம் ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமத்யாத் ॥**

*ஸாத்திரமோ பலப்பல வித்யைகளோ, அனந்தம் காலமோ குறுகியது தடைகளோ அதிகம், எது ஸாரமோ அதை நீரில்படு பாலை ஹம்ஸம் குடிப்பது போல் எடுக்க வேண்டும்.*

## மிருகங்கள் தரும் படிப்பினை

**ஸிம்ஹாதேகம் பகாதேகம் ஸிக்ஷேத் சத்வாரி குக்குடாத்**

**வாயாஸாத்பன்ச ஸிக்ஷேத் ஷட் ஸுனஸ்த்ரீணி கர்தபாத் ॥**

*சிங்கத்தினிடமிருந்து ஒன்றையும்,கொக்குவிடமிருந்து ஒன்றையும் காக்கையிடமிருந்து ஐந்தையும், நாயிடமிருந்து ஆறையும், கழுதையிடமிருந்து மூன்றையும் கற்க.*

## இருபது குணங்கள்

**ஏதான் விம்சதி குணான் ஆசரிஷ்யதி யோ நர:**

**கார்யாவஸ்தாஸு ஸர்வாஸு அஜேய : ஸ பவிஷ்யதி ॥**

*இந்த இருபது குணங்களை எவன் கடைபிடிக்கிறானோ எல்லா கார்யங்களிலும் வெற்றி அடைவான்.*

## சிங்கம்

**ப்ரபூதகார்யமல்பம் வா யன்னர; கர்துமிச்சதி ।**

**ஸர்வாரம்பேண தத்கார்யம் ஸிமாதேகம் ப்ரசக்ஷதே ॥**

*கார்யம் சிறியதோ, பெரியதோ தொடக்கத்திலிருந்தே உறுதியுடன் செய்வதை சிங்கதிடமிருந்து கற்க.*

**கொக்கு**

**இந்த்ரியாணி ச ஸம்யம்ய பகவத் பண்டிதொ நர: ।**
**தேசகாலபலம் ஞ்யாத்வா ஸர்வகார்யாணி ஸாதயேத் ॥**

*இந்த்ரியங்களை அடக்குதல், தேசபலம், கால பலம் பார்த்து கொக்கு செய்வதை போல் எல்லா கார்யங்களையும் வெல்க. ஒப்பிடுக கொக்கொக்க கூம்பும் பருவத்து வள்ளுவர்.*

**கோழி**

**ப்ரத்யுத்தானம் ச யுத்தம் ச ஸம்விபாகம் ச பந்துஷு ।**
**ஸ்வயமாக்ரம்ய போகம் ச ஸிக்ஷ்க்ஷேத் சத்வாரி குக்குடாத் ॥**

*தன் இனத்தாரோடு பகிர்ந்துண்ணல், அடக்குமுறை கண்டு சீறுதல், போர் புரிதல் ஸ்வய ஸம்பாதித்தை அனுபவித்தல் இந்த நான்கையும் கோழியிடமிருந்து கற்க.*

**காக்கை**

**கூடமைதுன சாரித்வம் தாக்ஷ்யம் காலே ச ஸம்க்ரஹும்**
**அப்ரமாதம் அவிஸ்வாஸம் பஞ்ச ஸிக்ஷேத் ச வாயஸாத் நச**

*ரகஸ்ய ஸம்போகம் திறமை, காலத்தில் செய்கை, மறதி இன்மை, நம்பிக்கை இல்லாதிருத்தல் இந்த ஐந்தையும் காக்கையிடமிருந்து கற்க.*

**நாய்**

**பஹ்வாசீ ஸ்வல்பஸந்துஷ்ட: ஸுனித்ரோ லகுசேதன:**
**ஸ்வாமிபக்தச்ச சூரச்ச ஷடேதே ச சுனா குணா: ॥**

*கோரப்பசியாயிருப்பினும் குறைவாய் உண்பது, நீண்ட தூக்கமாயிருப்பினும், உடனே விழித்தல், உரிமையாளனிடத்தில் பக்தி சூரத்வம் இந்த ஆறையும் நாயிடமிருந்து கற்க.*

*(தொடரும்)*

ப்ரதீபப் பேழை

# பேயாழ்வார் கண்ட பெருங்காட்சி

திருவாழ்மார்பன்

## மாயனை நாடி உள்ளத்துக் கொண்ட வகை

மாயன் தம் உள்ளத்தின் உள்ளே உறைகின்றான் (39, 83) என்றும், மனமாகிய படுக்கையிலே பள்ளிகொண்டு கிடக்கின்றான் (15) என்றும் பேயாழ்வார் சில இடங்களில் குறிப்பிட்டுள்ளார். உணரில் உணர்வு அரியான் ஆகிய மாயனை இவர் தமது உள்ளத்தே அமைத்துக் கொண்டது எப்படி என்றும் ஒரு பாசுரத்தில் விளக்கமாகக் கூறுகிறார். தமது கருவி கரணங்களை எல்லாம் ஒருமுகமாக்கி அவன்பால் செலுத்தினாராம். ஆராய்ந்து அறியும் விவேக உணர்ச்சி என்னும் பேரொளி மயமான விளக்கினை ஏற்றி, அவனை நாடினாராம். **நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்'** என்று திருமங்கை மன்னன் அருளிச்செய்தார் போலே அவனைத் தேடிப்பிடித்துத் தன்வயமாக்கிக் கொண்டாராம். அப்பொழுது அம்மாயனோ சகாதேவனுடைய அன்புத் தளைக்குக் கட்டுப்பட்டுக் கிடந்த கண்ணபிரானைப் போல நெஞ்சத்தில் குடிகொண்டுவிட்டான்; அங்கேயே அவன் நிற்கிறான்; பின் கால் கடுக்கவே இருக்கிறான். எவ்வளவு நேரந்தான் உட்கார்ந்த நிலையில் இருப்பது? பின் அவன் அவருடைய உள்ளத்திலே பள்ளி கொண்டு விடுகிறான். திவ்ய தேசங்களிலே எம்பெருமான் நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சி தந்தருளுமாறு போல இப்பொழுது ஆழ்வாருடைய உள்ளத்திலே நித்திய வாசம் செய்கிறானாம். பேயாழ்வார் பெற்ற இந்த அநுபூதி நிலையை,

**உய்த்து, உணர்வு என்னும் ஒளி கொள் விளக்கு ஏற்றி,**
**வைத்து, அவனை நாடி வலைப்படுத்தேன்; மெத்தெனவே**
**நின்றான், இருந்தான், கிடந்தான்-என் நெஞ்சத்து,**
**பொன்றாமை, மாயன் புகுந்து.** (94)

(உய்த்து - செலுத்தி; அதாவது கருவி கரணங்களை அடக்கி ஒரு முகமாக்கி: உணர்வு - உணர்ச்சி; நாடிதேடி வலைப்படுத்தேன் - என் வசமாக்கிக் கொண்டேன்;

பொன்றாமை - சிறைவில்லாதபடி; மெத்தென -மெதுவாக) என்னும் பாசுரத்திலே அருளிச் செய்துள்ளார்.

## உள்ளும் புறமும் உறைவானுக்கு அடிமை பூணல்

அகத்தில் பெருமான் கோயில் கொண்டிருப்பது போலவே புறத்தும் எங்கும் அவன் வியாபித்து நிற்கின்றான். அவன் இல்லாத இடம் எதுவும் இல்லை. எங்கும் நீக்கம் அற நிறைந்து நிற்கின்றான். அத்தகைய பரம்பொருளுக்கு அடிமை பூணுபவராய் ஆழ்வார், அவற்கு அடிமைப்பட்டேன்: அகத்தான், புறத்தான்' (37) என்று அருளிச் செய்கின்றார். எங்கும் இறைவன் நின்றருளும் காட்சியை, 'நாள்தோறும் என்னுடைய ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்ல புறத்தினுள்ளும் நீக்கம் இன்றி எங்கும் நின்றாய்' (திருவாய்மொழி 4, 7, 6) என்னும் சடகோபர் வாக்கினாலும் தெளிய உணரலாகும். இவ்வாறாக ஆழ்வார் எம்பெருமான் திருவடி சேர்ந்துள்ளமையால் வாழும் வகையைத் தாம் அறிந்ததாகவும் கூறுகின்றார். இறைவன் திருவடி சேர்ந்தமையால் வேறு புறப்பற்றுக்கள் தம்மை வந்து அணுகா என்றும், அதனால் நல்வாழ்வு வாழும் வழி நிச்சயம் கிட்டுவதாயிற்று என்றும் குறிப்பிடுகிறார். இதனால், பற்று விடற்கு, பற்று அற்ற பரமன் அடி சேர்தலே உபாயம் என்றும் குறிப்பித்தவாறாயிற்று. ஆழ்வார் பாசுரம் வருமாறு:

**வாழும் வகை அறிந்தேன் - மை போல் நெடு வரைவாய்த்**
**தாழும் அருவி போல் தார் கிடப்ப, சூழும்**
**திரு மா மணி வண்ணன், செங்கண் மால், எங்கள்**
**பெருமான் அடி சேரப் பெற்று.** (59)

(வரை - மலை; தார் - மாலை; திரு - திருமகள்; செங்கண்மால் - செந்தாமரை போன்ற கண்களையுடைய திருமால்)

## ஏழ்பிறப்பும் ஆண்டவனுக்கு அடிமையாக விரும்புதல்

இவ்வகையாக எம்பெருமானுடைய திருவடிகட்கு அடிமை செய்து வாழும் வாழ்வு எல்லாப் பிறப்புக்களிலும் தமக்கு ஏற்பட்டிருக்க ஆண்டவன் அருள் செய்ய வேண்டும் என்பது ஆழ்வாருடைய பெரு விருப்பம்.

**வாய் மொழிந்து வாமனனாய் மாவலிபால், மூவடி மண்**
**நீ அளந்துகொண்ட நெடுமாலே! தாவிய நின்**
**எஞ்சா இணை அடிக்கே ஏழ் பிறப்பும் ஆளாகி,**
**அஞ்சாது இருக்க அருள்.** (18)

(வாமனன் - குட்டையான உருவுடையோன்; வாய்மொழிந்து- பேசி; எஞ்சா - சுருங்குதல் இல்லாத; ஏழ் பிறப்பும் - ஏழு வகைப் பிறப்புக்களிலும்.) என்பது பேயாழ்வார் செய்யும் பெருவிண்ணப்பமாகும்.

## தேவர்க்கும் அறியொணாத் தேவன்

வானவர்கள் நாள்தோறும் தங்கள் திருமுடிகளைத் தாழ்த்து, மணம் நிறைந்த மலர்களைத் தூவி, வணங்கும்படியான திருமேனியை உடையான் எம்பெருமான். காஞ்சி மலர் போன்ற நிறமுடைய இந்திரன் என்ன, தாமரைப்பூவில் வந்த பிரமன் என்ன, நீண்ட சடையையுடைய சிவபெருமான் என்ன, இவர்களுக்குங்கூடச் சிறிதேனும் நினைத்து அறிய இயலா தவன் எம்பெருமான் என்கிறார். எல்லாத் தேவதைகளும் வணங்கும் தெய்வமாயும், தேவதைகளும் அணுக இயலாத தனித் தலைமைப் பெரும் பொருளாயும் எம்பெருமான் விளங்குகிறான் என்று எடுத்துக் காட்டுகிறார். இங்குக் கூறிய கருத்துக்களை,

**வடிவு ஆர் முடி கோட்டி, வானவர்கள் நாளும்**
**கடி ஆர் மலர் தூவிக் காணும் படியானை**

என்றும்,

**அலர் எடுத்த உந்தியான், ஆங்கு எழில் ஆய**
**மலர் எடுத்த மா மேனி மாயன், அலர் எடுத்த**
**வண்ணத்தான், மா மலரான், வார் சடையான் என்று**
**எண்ணத்தான் ஆமோ. இமை ?** (97)

(வடிவு - அழகு; கோட்டி- தாழ்த்து; கடி - மணம்; படியான் - திருமேனியை உடையவன்; அலர் எடுத்த உந்தி - தாமரை மலர் ஓங்கிய கொப்பூழ்: மலர் எடுத்த - பூப்போன்ற; அலர் எடுத்த வண்ணத்தான் - காஞ்சி மலர் போன்ற நிறமுடைய இந்திரன்; மா மலரான்-பிரமன் : வார் சடையான்-நீண்ட சடையையுடைய சிவன்; இமை - சற்று, சிறிது)

என்றும் வரும் ஆழ்வார் வாக்குகளில் காணலாம்.

## எம்பெருமானுடைய எழில் விளங்கும் இடங்கள்

தேவர்க்கு அரியனாயினும் அடியார்க்கு எளியனாய் அவன் காட்சி தருகிறான். அவனுடைய தெய்விகக் காட்சியைப் பாற்கடலிலே பாம் பணையின்மேல்

பள்ளிகொண்ட கோலத்தில் கண்டு களிக்கலாம். திருவேங்கடத்தில் நின்றும் திருக்குடந்தையில் கிடந்தும் அவன் அடியார்க்கு அருளுதல் காணலாம். வைகுந்தத்தில் நித்தியசூரிகள் சூழ முத்தர்க்கு விருந்தாக விளங்குகிறான். வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் அவன் ஒளி வீசி விளங்குவதைக் காணலாம். ஐம்புலன் அடக்கி ஒருமை உள்ளத்தராகிய யோகிகளின் இருதய கமலத்திலும் அவன் இருக்கிறான். எனவே, திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபமாய் விளங்கும் மூர்த்தியை மலர் தூவி அருச்சித்து வழிபடுவதனாலும், யோக முயற்சியாலும் அவனைக் காணலாம் என்று குறிப்பிப்பாராய், அவன் தமக்குக் குடியிருப்பாகக் கொண்டுள்ள இடங்கள் இவை இவை என்று காட்டுகிறார் ஆழ்வார்.

**சேர்ந்த திருமால்-கடல், குடந்தை,வேங்கடம்,**
**நேர்ந்த என் சிந்தை, நிறை விசும்பு, வாய்ந்த**
**மறை, பாடகம், அனந்தன்-வண் துழாய்க் கண்ணி**
**இறை பாடி ஆய இவை.** (30)

**பாற்கடலும், வேங்கடமும், பாம்பும், பனி விசும்பும்,**
**நூற்கடலும், நுண் நூல தாமரைமேல் பாற்பட்டு-**
**இருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்-**
**குருந்து ஒசித்த கோபாலகன்.** (32)

(குடந்தை - இப்பொழுது கும்பகோணம் என வழங்கும் ஊர்; சிந்தை - இருதயம்; நிறை விசும்பு - பூர்ணமான பரமபதம்; இறைபாடி - இராசதானி; அனந்தன்-ஆதிசேடன் என்னும் பெரும்பாம்பு; பனிவிசும்பு - குளிர்ந்த பரமபதம்; நூற்கடல் - கடல்போல் பரந்துள்ள சாத்திரங்கள்; நுண் நூல தாமரைமேல் மேற்பட்டிருந்தார் - நுட்பமான சாத்திரங்களால் விவரிக்கப்பட்ட இதயத் தாமரையில் கரணங்கள் நிலைக்க இருந்த யோகிகள்; குருந்து - குருந்த மரம்; ஒசித்த - முறித்த )

என்னும் பாசுரங்களில் எம்பெருமான் உறையும் இடங்களைக் காணலாகும்.

## கடல்வண்ணனைக் காணும் வழி

எங்கும் நிறைந்துள்ள இறைவனைத் திருவேங்கடம், திருக் குடந்தை முதலிய திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபத்திலே கண்டு வழிபடுதல் அவன் நெறி நிற்றற்கு ஒரு

வழி. அதனினும் மேலாக ஐம்புலன்களையும் அடக்கி யோகநிலையில் பயில்வார்கள் தம்முடைய உள்ளத்திலேயே அவனைக் காணலாகும். அதற்குரிய மார்க்கத்தையும் ஆழ்வார் ஒரு பாசுரத்திலே விளங்க உரைத்துள்ளனர். வேதத்தை நன்றாகப் பயின்று, அறிவு என்னும் தாழ்ப்பாளை இட்டு, பஞ்சேந்திரியங்களையும் வெளிச் செல்லாமல் உள்ளே அடக்கிவைக்கும் வலிய கதவை அடைத்து நன்றாகத் தியானிப்பவர் எந்நாளும் இறைவனைத் தரிசிப்பார்கள் என்கிறார்.

**அறிவு என்னும் தாள் கொளுவி, ஐம்புலனும் தம்மில்**
**செறிவு என்னும் திண்கதவம் செம்மி, மறை, என்றும்**
**நன்கு ஓதி, நன்கு உணர்வார் காண்பரே-நாள்தோறும்**
**பைங்கோத வண்ணன் படி.** (12)

(தாள் - தாழ்ப்பாள்; செறிவு -அடக்கம்: கதவம் - கதவு; செம்மி-அடைத்து; உணர்வார்-தியானிப்பவர்; பைங்கோத வண்ணன் - கடலின் நிறம் என்னும் போன்ற நிறமுடையவன்; படி - தன்மைகள்.)

இப் பாசுரத்தினால் இறைவனைத் தரிசிப்பதற்கான உபாயத்தை உணரலாம். இதுபோன்றே வள்ளுவரும் அறிவு என்னும் அங்குசத்தினால் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கிக் காப்பவன் மேலான வீட்டுலகிற்கு ஒரு வித்து ஆகிறான் என உருவகமாகக் கூறுகிறார்.)

**உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்**
**வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து.**

(குறள், 24)

(உரன் - அறிவு; தோட்டி - அங்குசம்; ஐந்து -ஐம்புலன்கள்: வரன் - மேலான ; வைப்பு - இடம்; வரன் என்னும் வைப்பு - வீட்டுலகம்).

என்பது வள்ளுவர் வாய்மொழி.

## பேர் ஓதுவார் பெறும் பயன்

எம்பெருமானை அர்ச்சாரூபமாய்த் தரிசித்தும், யோகநிலையால் தம் உள்ளத்தே கண்டு அநுபவித்தும் பயன் பெறுதல் எல்லார்க்கும் எளிதில் ஆகுவதன்று. அவனுடைய

பேரை ஓதினாலே போதும்; எங்கிருந்து அவன் பெயரைச் சொன்னாலும் பயன் உண்டு. முதலைவாய்ப்பட்ட கஜேந்திரன் என்னும் யானையின் அபயக்குரலுக்கு ஆண்டவன் ஓடோடியும் வரவில்லையா? அவன் பேர் உரைப்பார் சிறந்த ஒளி பெறுவார்கள்: வலிமை பெறுவார்கள்; செல்வம் மிகப் பெறுவார்கள்; அழகிய வடிவமும் பெறுவார்கள்; குற்றமற்ற நல்ல குடிப்பிறப்பு வாய்க்கும்; மற்றும் எல்லா நன்மைகளும் தாமே விரும்பி வந்து அவரை அடையும், இவ்வாறு பெருமானது பேர் ஓதுவார் பெரும் பயனைப் பேயாழ்வார்.

**தேசும், திறலும், திருவும், உருவமும்,**
**மாசு இல் குடிப்பிறப்பும், மற்றவையும்- பேசில்**
**வலம் புரிந்த வான் சங்கம் கொண்டான் பேர் ஓத**
**நலம் புரிந்து, சென்று அடையும், நன்கு.** (10)

(தேசு - தேஜஸ், ஒளி; திறல் - பராக்கிரமம்; திரு - செல்வம்; உரு - வடிவம்; பேர் ஓதப் பேசில் எனக் கூட்டுக. பேரை ஓத வேண்டும் என்று சொன்ன மாத்திரத்தில்.)

என்னும் பாசுரத்தில் பேசியுள்ளார்.

**மறவாது வாழ்த்துக, வாய்!**

அவன் பேரைச் சொல்ல வேண்டும் என்று எண்ணி உரைப்பார்க்கே இத்தனை பேறுகள் வாய்க்கும் என்றால், அவனை எப்பொழுதும் துதிப்பார் அடையும் நன்மைக்கு எல்லையுண்டோ? திருமாலின் திரு நாமங்களை ஓதும் நாள்களே பயனுடைய நாள்களாகும்; அவனுடைய திருவடிகட்கு ஆளாகி, என்றும் மறவாது அவனை என் வாய் வாழ்த்தட்டும் என்கிறார் பேயார். 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' என்று அப்பர் பெருமான் கூறியது போலவே இவரும், 'திருமாலை என் வாய் வாழ்த்த வேணும்; வாழ்த்தினால் முன்பு சென்ற நாளும், இனி வரும் நாளும், இப்பொழுது நிகழும் காலமும் ஆக எல்லாக் காலமும் நல்ல காலமாகும் என்கிறார்.

**சென்ற நாள், செல்லாத, செங்கண்மால் எங்கள் மால்**
**என்ற நாள், எந்நாளும் நாள் ஆகும்; என்றும்**
**இறவாத எந்தை இணை அடிக்கே ஆளாய்,**

**மறவாது வாழ்த்துக-என் வாய். (17)**


(செல்லாத - செல்லாத நாள் - இனி வரும் காலம்; எந்தை -எம்பெருமான்.)

என்பது ஆழ்வார் திருவுள்ளம். பேயாழ்வார் கூறியவண்ணமே இறைவனுடைய பேரை ஓதி வாழ்த்துதல் எத்தகையாருக்கும் எளிய செயல் அன்றோ? ஆண்டவனை மறவாது என்றும் நாம் வாழ்த்துவோம்.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் ஸர்வப்ராணிஸ்வரூபாய வேதாந்தபாஸ்கராய நம: ॥

**ஏகமேவ பரம் ப்ரஹ்ம ப்ரஹ்மாதித்யாத்யுபாதித:**

**பஞ்சபூதாதிரூபேண பாதி வேதாந்தபாஸ்கர: ॥**

இரண்டற்ற பரப்பிரம்மமே ஹிரண்யகர்ப்பன், ஸூரியன், பஞ்சபூதங்கள் எனப்படும் ரூபங்களிலும் காணப்படுபவன்.

## 8. ஸகல பிராணிகளும் பரப்பிரம்மமே தான் !

**ஏஷ ப்ரஹ்ம ஏஷ இந்த்ர ஏஷ ப்ரஜாபதி: ஏதே ஸ்ர்வே தேவா: இமானி பஞ்ச மஹாபூதானிந ப்ருதிவீ வாயு : ஆகாச ஆபோ ஜ்யோதீம்ஷி இத்யேதானி இமானி ச க்ஷுத்ரமிச்ராணீவ ॥**

**ஐதரேயோபநிஷத் 3-1-3**

*ஆத்மாவே அபரப்பிரம்மனும், இந்திரனும், பிரஜாபதியும், தேவதைகளும் ஆகியிருக்கிறான். பூமி, ஆகாசம், காற்று அக்னி, நீர் என்னும் பஞ்ச மகாபூதங்களுமாக இருக்கிறான். இவனே கீழான பிராணிகளிலும் இருக்கிறான்.*

பிரஜ்ஞான சொரூபனாகிய ஆத்மாவே சகல பிராணி ரூபத்திலும் காணக் கூடியவன். உபாதிகளில் மட்டுமே, கீழானது மேலானது, உயர்ந்தது-தாழ்ந்தது போன்ற பேதங்கள் இருக்கின்றன. பிரம்மத்தில் பேதம் கிடையாது. ஆத்மா ஒன்றே. நாமரூபங்கள் மட்டுமே வேறு வேறு.

இந்த விசாலமான சிருஷ்டியின் முதலானவன் ஹிரண்யகர்ப்பன். இவனுக்குப் பிரம்மா என்றும் பெயர். இவன் தான் **அபரம் ப்ரஹ்ம** என்றும் அறியப்படுகிறான். மற்றும் வைச்வானரன், விராடபுருஷன் போன்ற பெயர்களால் அறியப்படுகிறான். இவனே எல்லா பிராணிகளுக்கும் மூலம். இவனே நிஜமான பரப்பிரம்மமும் ஆகியிருக்கிறான். இந்த சிருஷ்டியிலுள்ள இந்திரன், தேவதைகள், மனிதர்கள், ராக்ஷஸர்கள், பசுபக்ஷிகள் முதலான யாவரும் பரப்பிரம்மமே.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

பௌராணிகர் மௌனத்தில் சிந்தனை வயப்பட்டு உட்கார்ந்திருந்தார். அவர் என்ன கதை கூறப்போகிறார் என்று ஆவலுடன் சிஷ்யன் காத்திருந்தான். பௌராணிகர் சில பேருடைய மகிமை தெரிய வேண்டுமெனில் கொடுமையான சம்பவம் அல்லது கசப்பான சம்பவம் ஏற்படும். கைகேயி வரம் வேண்டவில்லையெனில் ராவண வதம் நிகழ்ந்திருக்காது. அது போல இப்போது நான் சொல்லும் கதையும் அமைந்துள்ளது.

பொன்னி நாட்டில் ஏமப்பேறூர் என்னும் ஊர் இருந்தது. அங்கு நமி நந்தி அடிகள் என்னும் ப்ராம்மணர் இருந்தார். அந்தணர் ஒழுக்கம் என்னும் அறு தொழிலை செய்து வந்தார். சிவ பக்தர். அருகில் இருந்த திருவாரூர் பெருமானை தர்சிக்க ஒரு நாள் சென்றார். த்யாகராஜப் பெருமானை வணங்கினார், மகிழ்ந்தார். அன்று மாலை த்யாகராஜ பெருமானுக்கு விளக்கு ஏற்றி வழிபட வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. தன் ஊருக்குச் சென்று நெய் கொண்டுவர நேரம் ஆகிவிடும் என்ற எண்ணத்தில் அங்கேயே ஒரு வீட்டில் நெய் வாங்கச் சென்றார். அவரது கெட்ட காலம் சிவனை தூஷிக்கும் சமணர் வீடு ஆக இருந்தது. இவரும் நெய் கேட்க அவர்கள் ‘சிவன் கையில் நெருப்பு இருக்கிறதே! விளக்கு அவருக்கு அதிகம், நெய்யிற்குப்பதில் நீரில் ஏற்றும்’ என்று கிண்டலாக பதில் அளிக்க அடிகள் மனமுடைந்தார். அவ்வருத்தத்துடன் ஆரூரானை வணங்கினார். அப்போது ‘கவலை கொள்ளாதே குளத்து நீரில் விளக்கு ஏற்றுக’ என்று அசரீரி சொல்லியது.

இது பகவான் செயல் என்று எண்ணி நமசிவாய என்று சொல்லிக் கொண்டே குளத்திலிருந்து நீரெடுத்தார், அகல்கள் முழுவதும் நிரப்பினார் சுடர் ஏற்றினார். கோவில் முழுவதும் நீரில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. இரவு கோவில் மூடும் வரை அங்கிருந்தார். பின்பு தன் ஊர் சென்றார். மறு நாளும் மாலை வந்து நீரில் விளக்குகளை ஏற்றி வழிபட்டார். இவருடைய அற்புத செயலைக் கேட்ட சோழ ரா ஜா அக்கோவிலுக்கு பல கொடைகள் தர சாஸனம் செய்தான். பங்குனி உத்திரத் திருவிழா கொண்டாட நமி நந்திகள் கேட்க அவனும் அதற்கு ஆவண செய்தான்.

விழாவில் மணலி என்னும் ஊருக்கு ஆரூரர் போவது வழக்கம் - ஜாதி வேறுபாடின்றி அனைத்து மக்களும் கலந்து கொள்வர். அவ்விழாவில் அடிகளும் கலந்து கொண்டார். விழா முடிந்தது. அவரும் தன் ஊருக்கு வந்தார். வெளியிலேயே அமர்ந்தார். மனைவி

உள்ளே வரும்படி சொல்ல விழாவில் பல பேரோடு இருந்ததனால் தீட்டு ஏற்பட்டுவிட்டது. நீராடினபின் வருவேன் என்றார். ஆனால் அன்றிரவு கனவில் 'அப்ப! ஆரூரில் பிறந்தவர் அனைவரும் நம் கணமே'' என்று சிவ பெருமான் இடித்துரைத்தார். தவறு செய்து விட்டோம் என்று உணர்ந்து ஆரூருக்குச் சென்றார். அங்கிருந்த அனைவரும் சிவ கணங்களாயிருப்பது கண்டு வியந்தார். தன் ஊரை விட்டு ஆரூருக்குக் குடி பெயர்ந்தார். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தார். அதனால்தான் அப்பர் ஸ்வாமிகள் அவரை நமி நந்தி தொண்டர்க்கு ஆணி என்று புகழ்வார். இந்த தீட்டு விஷயத்தில் சாஸ்த்ரங்கள் என்ன சொல்கின்றன? பெரிய யாக யக்ஞங்கள் செய்பவராய் மடி ஆசாரத்திற்கு முக்யத்வம் கொடுப்பவராயிருந்தாலும் பொது மக்கள் கலந்து கொள்ளும் இறைவனுடைய திருவிழாவில் அவர்கள் கலந்து கொண்டால் தீட்டு விழுப்பு கிடையாது. விழா முடிந்து ஸ்னானம் செய்ய வேண்டியதில்லை என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

தேவார டாக்டர் நாசுப்ரமணியம்



ஸ்ரீ பெரியவர்கள் ஒரு தடவை என்னிடம் அம்பா ஓட்டிய பாட்டு தெரியுமா? என்றார்கள். நான் தெரியாது என்று கூற அவர் நகைச்சுவையுள்ள ஒரு கதையை சொன்னார்கள். இமவான் மகளாதலால் அம்பாளுக்கு மலையான் மகள் என்று பெயருண்டு. இதை திருவையாற்றுப் பதிகத்தில் 'மாதர் பிறைக் கண்ணியானை மலயான் மகளோடும் பாடி' என்று அப்பர் பாடியிருக்கிறார். இங்கிலாந்து நாட்டுக்காரன் ஒருவன் நம் தேவாரம் படிக்க வந்தான். அவனுக்குத் தமிழ் தெரியாது தமிழ் உச்சரிப்பும் தெரியாது. தேவார ஓலைச்சுவடிகளை ஒருவரிடம் படிக்கச் சொல்லி ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு படிப்பான்.

மலையான் மகளொடும் பாடி' என்பதை மலையான் மக்கள் ஓட்டும் பாட்டி (malaaiyaan makkal oottum paatti) என்று எழுதி அம்பாளை ஓட்டியே விட்டான். இப்படிச்சொல்லி முடித்தவுடன் நாங்கள் சிரிக்க அவரும் குலுங்கிச் சிரித்தபோது 'ஞானிகள் குழந்தைகள் போலிருப்பர்' என்ற ஆன்றோர் வாக்கு நினைவுக்கு வந்தது.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர். **வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**



யுதிஷ்டிரரின் வீர வசனத்தை கேட்ட துர்யோதனன் களைத்துப் போயிருப்பினும் கதாயுதத்தை எடுத்துக் கொண்டு மடுவிலிருந்து வெளிப் போந்தான் துர்யோதனன் ''தர்மனே ! ஒருவரொருவராய் என்னுடன் சண்டையிடுங்கள். ஒரு வீரனோடு பல பேர் சண்டையிடுவது தர்மம்மாகாது. நானோ ஒருவன், கவசங்கள் இழந்தவன், காயமுற்றவன். களைத்திருப்பவன், துணை இல்லாதவன்.

**யுதிஷ்டிரர் :** '' பல பேர் ஒரு வீரனைத் தாக்கக்கூடாது அது அதர்மம் என்கிறாயே அபிமன்யுவை தாக்கிக் கொன்ற போது எங்கே போயிற்று உன் தர்மம்? கஷ்டத்தில்தான் தர்மம் நினைப்புக்கு வரும். வா கவசம் பூண், எங்களோடு யுத்தம் செய். அரசனாக இரு. தோற்றால் ஸ்வர்கம் செல்''

அப்போது பீமன் ''இவனோடு யுத்தம் செய்ய நான் ஒருவனே போறும். சகுனியின் பேச்சைக் கேட்டு நாசமடைந்த துர்யோதனன் கதை பீமனால் முடிந்தது என்று த்ருதராஷ்டிரன் அறியட்டும்.'' என்று கூறினான்.

துர்யோதனன் கவசம் பூண்டு வெளியே வர அவனுக்கும் பீமனுக்கும் பெரும் கதை யுத்தம் நிகழ்ந்தது. கதைகள் மோத நெருப்பு பொழிந்தது. இரு சிங்கம் போலும் இரு யானைகள் போலும் சுற்றிச் சுற்றி இருவரும் மோதிக் கொண்டனர். மண்டலமாய் சுற்றினர். அரை மண்டலமாய் சுழன்றனர். பல விதமான கதிகளுடன் இருவரும் போர் புரிந்தனர். கண்ணன் சூசிபிக்க பீமன் துர்யோதனனின் துடையை பலமாகத் தாக்கி பூமியில் சாய்த்தான். அவன் கீழே சாய பீமன் அவனுடைய தலையை தன் காலால் உதைத்து வெற்றி கோஷமிட்டான்.

*யுதிஷ்டிடர் : '' பீம! நிறுத்து. உன் சபதம் நிறைவேறிற்று, பகைமையை போக்கு, காலால் அவன் தலையை இடறாதே, தர்மத்தை கை விடாதே. இதோ வீழ்ந்திருக்கும் துர்யோதனன் அரசன், நம் உறவினன் பாபியாகாதே.'' பீமனிடம் இவ்வாறு பேசியபின் யுதிஷ்டிரர் அவனைப் பார்த்து ''உன்னுடைய தவறாலேயே , பொறாமையாலேயே இந்த கதி உனக்கு நேர்ந்தது. வருந்தாதே.*

*உன் மரணம் வீர மரணம். நாங்கள்தான் உறவினன் இல்லையே என்று வருந்த வேண்டும். நீ வருந்த வேண்டியதில்லை'' என்று கூறினார்.*

*க்ருஷ்ணர் : அன்பர்களே தேரில் ஏறுங்கள் இந்த பாபி கொல்லப்பட்டான். உங்கள் பந்துக்களுடன் சேருங்கள்' அவருடைய இந்த பேச்சைக் கேட்ட துர்யோதனன் தன் புருவத்தை நெறித்து அவரிடம் கூறினான்*

*துர்யோதனன் : லக்ஷக்கணக்கான வீரர்களையும் பல மன்னர்களையும் உன் கபடத்தால் அழித்தாயே உனக்கு வெட்கமில்லையா? பீஷ்மர், த்ரோணர், கர்ணன் இவர்களோடு கபடமில்லாத யுத்தத்தைச் செய்திருந்தால் வெற்றி பாண்டவர்களுக்குக் கிடைத்திருக்குமா?*

*க்ருஷ்ணர் : பாண்டவர்களின் அழிவிற்காக அரக்கு மாளிகை தர்மமா? பீமனுக்கு விஷம் வைத்துக் கொல்லப்பார்த்தது தர்மமா? அவையில் பாஞ்சாலியின் வஸ்த்ரம் பற்றி இழுத்தது தர்மமா ? சொக்கட்டான் ஆட்டத்தில் திறமையில்லாத தர்மனை சகுனி மூலமாகத் தோற்கடித்தது தர்மமா? யுத்த பூமியில் அபிமன்யுவை கொன்றது தர்மமா? உனது பேராசையால் வீழ்ந்தாய். உன் வினை உன்னை மட்டுமல்ல அனைவரையும் அழித்தது. துர்யோதனன் நான் க்ஷத்ரிய தர்மத்தைப் பின் பற்றியவன். இதை விட எனக்கு என்ன சிறப்பு வேண்டும். நான் ஸ்வர்கம் புகுவேன். நீயோ இங்கே நிந்திக்கப்படுவாய். பீமனால் தலை உதைக்கப்பட்டது கண்டு நான் கவலை கொள்ளவில்லை. இன்னும் சில நொடிகளில் என் தலையை காகனகளும் கழுகுகளும் கொத்தும். நான் அதற்கு வருந்தவில்லை. நான் வீர ஸ்வர்கம் புகுவேன். அவன் அப்படி கூறிக்கொண்டிந்த போதே வனிலிருந்து புஷ்பமாரி அவன் மீது விழுந்தது. பின்பு அங்கிருந்த வீரர்களும் மன்னர்களும் தங்கள் சங்கெடுத்து ஊதினர் வெற்றி முழக்கமிட்டனர். அவர்களிடம் க்ருஷ்ண பரமாத்மா இந்த இடம் அமங்களமானது. இவ்விடம் நீங்கி வெளியேருவோம் என்று கூற அனைவரும் ஒகவதி ஆற்றின் கரைக்குச் சென்றனர்.*

*(தொடரும்)*

# சிவ மான ஸிக பூஜை

ஸதாசிவ ப்ரம்மேந்திரர் அருளியது

எங்கும் இருக்கும் பரமாத்வான சிவனை ஒரு ரூபத்தில் எப்படி பூஜிப்பது என்ற திகைப்பில் எழுந்த ஸ்லோகங்கள் ப்ரம்ம ஞானியான ப்ரம்மேந்த்ரர் தன் அனுபூதியில் அருளியது



आपाटलजटानाम् अनिलच्छाय कन्हदरसीम्नाम्
आपाण्दु विग्रहाणाम् अद्रुहिणम् किन्करा वयम् महसाम्

**ஆபாடலஜடானாம் அனிலச்சாய கந்தரஸீம்னாம்**
**ஆபாண்டு விக்ரஹாணாம் அத்ருஹிணம் கிங்கரா வயம் மஹஸாம் ॥ 21 ॥**

*பாதிரிப்பூ போல் சற்றே சிவந்த சடையுடையவர்களும், கழுத்தின் பின் புறம் வரையில் பரவிய நீல நிறத்தின் காந்தியை உடையவர்களும் வெண்ணிற மேனி உடையவர்களுமான ஜோதி மூர்த்திகளுக்கு நாங்கள் எல்லாரும் கிங்கரர்கள்.*

मुषितस्मरावलेपे मुनित नयायुर्वदान्यपदपद्मे ।
महसि मनो रमताम् मे महति दयापूर्मेदुरापान्गे ।।

**முஷிதஸ்மராவலேபே முனித நயாயுர்வதான் யபதபத்மே**
**மஹஸி மனோ ரமதாம் மே மஹதி தயாபூரமேதுராபாங்கே ॥ 22 ॥**

*மன்மதனுடைய கர்வத்தை அடக்கினவனும் முனிகுமாரனான மார்க்கண்டேயனுக்கு அளித்த வள்ளலான திருவடித்தாமரையை உடையவனும், தயையாலே நிறைந்து மெதுவான கடைக்கண்களை உடையவனுமான பெரும் ஜோதினிடத்தில் என் மனது இன்புறுவதாகுக.*

शर्मणि जगताम् गिरिजा नर्मणि सप्रेमह्रुदयपरिपाके

ब्रह्मणि विनमद्रक्षण कर्मणि तस्मिन्नुदेतु भक्ति में

**ஸர்மணி ஜகதாம்கிரிஜா நர்மணி ஸப்ரேமஹ்ருதயபரிபாகே**

**ப்ரஹ்மணி வினமத்ரக்ஷண கர்மணி தஸ்மின்னுதேது பக்திர் மே ।। 23**

*ஜகத்துக்கு இன்பமயமானவனும், பார்வதி தேவியோடு இன்புறுவனும், ப்ரேமையால் இதயம் இளகிப் பக்வமானவனும் தன்னை வணங்குவோரை காப்பாற்றுவதையே தொழிலாக்க கொண்டவனுமான அந்த பர ப்ரம்மத்தினடத்தில் எனக்குப் பக்தியானது உதிக்க வேண்டும்.*

अस्मिन्नपि समये मम कन्टछ्छायाविधूतकालाभ्र

अस्तु पुरो वस्तु किमपि अर्धान्गदारम् उन्मिषनम् निटितलम्

**அஸ்மின்னபி ஸமயே மம கண்டச்சாயாவிதூதகாலாம்ரம்**

**அஸ்து புரோ வஸ்து கிமபி அர்தாங்கதாரம் உன்மிஷன் நிடிதலம் ।। 24**

*கழுத்தின் நிறத்தில் கால மேகத்தை வென்றதும், திரு மேனியில் பாதியை மனைவியை உடையதும்,ஒளிரும் நெற்றியை உடையதுமான சொல்ல ஒண்ணாத ஒரு பொருள் இந்த நேரத்திலும் என் முன் இருப்பதாக.*

झटिलाय मौळिभागे जलधर नीलाय कन्धराभोगे

द्वलाय वपुषि निखिलम् धाम्ने स्यान् मामको नमोवाक:

**ஜடிலாய மௌலிபாகே ஜலதர நீலாய கந்தராபோகே**

**தவளாய வபுஷி நிகிலம் தாம்னே ஸ்யான்மாமகோ நமோவாக: 25**

*தலையில் (குடுமியிருக்கும் பாகத்தில் ) ஜடை உடையவனும் கழுத்துப் ப்ரதேசத்தில் நீருண்ட மேகத்தைப் போன்ற கரு நீல நிறமுடையவனும், திரு மேனி முழுவதும் வெண்ணிறமுடையவனுமான ஜோதி மூர்த்தியிடம் நான் கூறும் நமஸ்காரம் அமைவதாக.*